THE HINDU

19 - MAY 2024

INBRIEF



## Dhinakaran urges EC to ensure security of EVMs

AMMK founder T.T.V. Dhinakaran on Tuesday urged the Election Commission of India (EC) to take precautionary measures to ensure the safety of Electronic Voting Machines (EVMs). He also sought an uninterrupted CCTV coverage of strong rooms, where the EVMs are stored till counting day. Polling for the Lok Sabha election took place in Tamil Nadu during the first phase on April 19. The counting of votes is scheduled to take place on June 4. In a social media post, Mr. Dhinakaran referred to media reports about the arrest of a former employee of an engineering college in Theni district, where EVMs had been kept. He also referred to the interruption in the CCTV coverage of strong rooms in Erode and the Nilgiris. The attempted entry of an individual into the campus guarded by Central and State police personnel, and technical issues leading to the interruption of CCTV coverage had caused suspicion in the minds of the people, Mr. Dhinakaran said.

DECCAN CHRONICLE

11 - MAY 2024

# EC defers polls for Anantnag till May 25

YUSUF JAMEEL
SRINAGAR, APRIL 30

The Election Commission (EC), while accepting the plea of the BJP and some other parties, has deferred the polling in Anantnag - Rajouri Lok Sabha seat till May 25, owing to "various logistic, communication and natural barriers of connectivity".

The polling for the seat was to be held in the third phase of elections on May 7 and former chief ministers Omar Abdullah and Mehbooba Mufti had opposed change in the schedule.

The EC said that various representations were received by it from different political parties of the Jammu and Kashmir for shifting the date of the polling in Anantnag-Rajouri constituency "due to various logistic, communication and natural barrier of connectivity turning out as hindrance in campaigning, which may affect poll process, which in turn tantamount to lack of fair opportunities for the contesting candidates in the said parliamentary constituency which may affect poll process."

It added, "The commission, after considering report from the Union territory administration as well as analysing the ground situation, has decided to revise the date of poll in the said Parliamentary Constituency.

THE TIMES OF INDIA

11 - MAY 2024

# CCTV camera malfunctions in Erode strongroom again

## Problem Was Solved In Two Hours: Collector

Times News Network

S Parthiban



ANOTHER GLITCH

**Erode:** A day after one of the 220 CCTV cameras at the strong rooms at IRTT Engineering College at Chithode reported loss of video signal, another CCTV camera encountered a similar problem there on Tuesday morning.

District collector and election officer Raja Gopal Sunkara said the wire connecting a CCTV camera to the monitor was disconnected, disrupting live streaming. "The CCTV camera continued to record, while the live streaming was hit. The problem, which was reported around 7am, was resolved in two hours. Officials have briefed political party agents about the situation."

Meanwhile, T T V Dhinakaran, general secretary, Amma Makkal Munnetra Katchi, called on the Election Commission of India to prioritize security at the vote counting centres until election results are declared.

Pointing to incidents in which a former employee tried to enter a counting centre at Kammavar Sangam College of Engineering in Theni and CCTV malfunctions at strong rooms in the Nilgiris and Erode parliamentary constituencies, Dhinakaran said, "The Election Commission of India should take steps to prevent technical glitches such as CCTV camera malfunctions and enhance security measures at vote counting centres across Tamil Nadu."

## Man tries to enter Theni strongroom, arrested

Times News Network

**Theni:** Police arrested a man for trespassing into the Theni Kammavar Sangam College of Arts & Science in Koduvilarpatti on Tuesday, where EVMs and control units have been stored. Investigation revealed that the accused Rajesh Kannan from Sippalakottai was a former staff in the college canteen and had gone to see one of his old acquaintances on the college premises. Kannan arrived at the gate on his two-wheeler and claimed that he was a staff at the college canteen. Police detained him after discovering that the card he had produced for entry had expired. Kannan was also drunk.


Theni district collector R V Shajeevana, who was on patrol there, ordered the police to arrest Kannan.

The man was produced before a court and remanded. AIADMK candidate N T Narayanasamy visited the strong room premises and inspected the place. He said that there was no breach in security.

THE TIMES OF INDIA
11 - MAY 2024

# Madras HC rejects plea for repoll in Kovai after including voters left out

TIMES NEWS NETWORK



**Chennai:** Madras high court has rejected an NRI doctor's public interest writ petition to direct the Election Commission of India (ECI) to conduct a special polling for voters who were left out in Coimbatore Lok Sabha constituency.

"The polling has already taken place. The draft voters list was published on Jan 27, 2023, and the final voters list was published on Jan 22. The petitioner did not raise any objection to the same," the first bench of Chief Justice Sanjay Vijaykumar Gangapurwala and Justice G Chandrasekharan said on Tuesday.

Representing the commission, advocate Niranjan Rajagopal submitted that the affidavit of the petitioner suggested that he was a resident of Australia and was not ordinarily a resident of the constituency.

The name of the petitioner was removed in the 2021 general election, he added.

Recording the submissions, the bench said that in the light of the factual aspects, no orders could be passed.

According to petitioner R Suthanthira Kannan, he came to Coimbatore from Australia on April 13 to cast his vote in the election to the Lok Sabha scheduled on April 19.

However, both his name and that of his wife were found deleted from the voters list prepared for the election, his counsel M Mathan Raj stated in the petition.

After giving a representation to the commission, he started to gather information and came to know that a huge number of voters' names in his vicinity were left out or deleted from the list, he said.

THE NEW INDIAN EXPRESS
01 - MAY 2024

# EC releases phase 1, 2 turnout data, Oppn seeks explanation for delay

**MUKESH RANJAN** @New Delhi



AFTER an 11-day delay since the first phase of voting for the 2024 Lok Sabha elections, the Election Commission of India (ECI) finally released the official overall turnout data for the completed phases on Tuesday. According to the ECI, the voter turnout in the first phase was recorded at 66.14 percent, while in the second phase, it slightly increased to 66.71 percent.

This turnout was observed across 102 parliamentary constituencies (PCs) in the first phase and 88 PCs in the second phase. In comparison, the turnout in the first phase of the 2019 polls was 69.43 percent.

The official data indicates that in the first phase, the voter turnout was 66.22 percent for males, 66.07 percent for females, and 31.32 percent for third-gender voters, resulting in an overall turnout of 66.14 percent. Voting for this phase took place on April 19. In the second phase, which occurred on April 26, the turnout was 66.99 percent for males, 66.42 percent for females, and 23.86 percent for third-gender voters, with an overall turnout of 66.71 percent. Bihar recorded the lowest voter turnout of 49.26 percent in the first phase, while Uttar Pradesh recorded the lowest turnout (55.19 percent) in the second phase.

DECODE LS POLLS '24 DECIDE

The EC highlighted that out of the 21 states and union territories that went to polls in the first phase, 11 recorded a higher turnout of women voters, including Arunachal Pradesh, Assam, Jammu and Kashmir, Lakshadweep, Manipur, Meghalaya, Nagaland, Puducherry, Tamil Nadu, Uttarakhand, and West Bengal.

In the second phase, where 13 states and UTs went to polls, six registered a higher women voter turnout, including Assam, Bihar, Jammu and Kashmir, Uttarakhand, Kerala, and West Bengal. Explaining the delay in announcing the official data on voters' turnout, ECI officials clarified that it could only be released after counting the postal ballots and adding them to the total EVM vote count. "This includes postal ballots given to service voters, absentee voters, those above 85 years of age, persons with disabilities, those on essential services, and voters on election duty," a senior ECI official said.

Congress general secretary in-charge of Communications, Jairam Ramesh, questioned the delay in a post on X, stating, "For the first time, even 11 days after the first phase of the polls and four days after the second phase, the final voter turnout has not been published by the ECI. In the past, the ECI used to publish the final voter turnout immediately after voting or within 24 hours."

CPI(M) leader Sitaram Yechury said, "Finally, ECI has released the final voter turnout figures for the first 2 phases, which are substantially higher than the initial figures. But why are the absolute numbers of voters in each Parliamentary constituency not provided?."

THE NEW INDIAN EXPRESS

01 - MAY 2024

# NOW, MONITOR DISPLAYING STRONG ROOM FEEDS GOES BLANK IN ERODE

EXPRESS NEWS SERVICE @Erode

THE District Returning Officer Raja Gopal Sunkara on Tuesday ordered a re-inspection of the connections to the CCTV cameras installed in the strong rooms at Government Engineering College in Chithode after one monitor displaying the feed went blank.

In a statement, Raja Gopal Sunkara said, "On Tuesday around 7 am, the CCTV visuals of the strong room where the EVMs of Kumarapalayam Assembly constituency are kept, did not appear on the monitor. On information, officials led by Erode RDO conducted an inspection and found fault with the wiring from the strong room to the control room. This is why CCTV recordings were not visible on TV."

"This detail was explained to representatives of the candidates and the issue was fixed around 9 am. In addition, the contractor appointed for this purpose has been directed to conduct a re-inspection of the CCTV connections and submit a report. Appropriate instructions have been given to the contractor to avoid further disturbances," he added.

**Faulty wiring**

Officials led by Erode RDO conducted an inspection and found fault with the wiring from the strong room to the control room. This is why CCTV recordings were not visible on TV

He further said that adequate security is being provided to the strong rooms and it will continue till June 4.

Notably, on Monday, a camera was faulty in the strong room, where the EVMs for the Erode West constituency are kept.

THE NEW INDIAN EXPRESS
1 - MAY 2024

# Man arrested for trying to trespass into strong room

EXPRESS NEWS SERVICE @ Theni

A 27-year-old man was arrested for trespassing into a strong room at the Kammavar Sangam College of Technology late on Monday.

The accused, S Rajesh Kannan, a resident of Koduvilarpatti, was a former employee of the college.

The counting centre at the college doubles up as a strong room for storing polled EVMs, VVPATs and postal ballots used in six assembly constituencies — Sholavandhan, Usilampatti, Periyakulam, Cumbum, Andipatti and Bodinayakanur — and is under 24x7 CCTV surveillance. Moreover, nearly 100 police personnel have been deployed outside the strong room.

Around 12.30 am on Monday, Rajesh tried to trespass into an inebriated state. Police prevented his entry, following which he picked up a quarrel with the police and used foul language. Based on a complaint by Koduvillarpatti VAO J Madhukannan, Palanichettipatti police arrested Rajesh under Sections 448, 188, 294(b), 353, 506(ii) of the IPC. Further investigation is under way.

## Action against RO sought

Chennai: PMK's candidate for the Arakkonam parliamentary constituency, K Balu, has lodged a formal complaint with the CEO, urging action against returning officer S Valarmathi for her alleged failure to address reported instances of money distribution by DMK candidate S Jagath Ratchagan. Balu highlighted instances where money was seized from DMK functionaries.

THE NEW INDIAN EXPRESS

13 - MAY 2024

# After sorting, 1.02L postal ballots sent to LS constituencies from Tiruchy

**EXPRESS NEWS SERVICE** @ Tiruchy

WITH the process of sorting the postal ballots that were brought from 40 Lok Sabha constituencies, including Puducherry, to the Centralized Sorting Facilitation Centre at the Tiruchy collectorate drawing to a close on Tuesday, a total of 1,02,469 polled postal ballots and 21,891 unpolled ones were forwarded to their respective constituencies.

A team of election officials led by District Revenue Officer R Rajalakshmi sorted the ballots and handed them over to the nodal officers of the respective constituencies. Representatives of recognised political parties and the candidates participated in the process that prolonged till evening.

During the first day of sorting on April 17, a total of 93,642 postal ballots were brought to the facilitation centre. They were handed over to the nodal officers of the respective constituencies after completion of sorting.



Postal ballots were forwarded to the respective constituencies after sorting was completed at the centralised centre in Tiruchy on Tuesday | M K ASHOK KUMAR

The remaining 8,827 polled postal ballots and 21,891 unpolled ones from the 40 constituencies were brought to the centre on Tuesday. They were also sorted and forwarded, officials said. It may be noted that the ECI had taken the initiative of setting up the facilitation centre for the first time to minimise manpower and to cut down on costs involved in counting the postal ballots cast by voters on election duty.

DT Next
1 - MAY 2024

## Man held for trespassing into strongroom

**MADURAI:** A 27-year-old youth identified as S Rajesh Kannan of Raja Street, Seepalakottai, trespassed into the counting centre at Theni Kammavar Sangam College in Koduvilarpatti on a two-wheeler. The EVMs of votes polled in Theni LS constituency are kept in a strong room at the college. The security guards intercepted the youth, who got furious and started abusing the police. After inquiring, police sources said that a woman, his relative works in the college and he entered the counting centre in violation to meet the relative thinking that the college was functional as usual. Based on a complaint lodged by Koduvilarpatti VAO J Madhukannan, PC Patti police have booked a case against and arrested the youth.

DT Next
1 - MAY 2024

# LS polls hit Corpn's property tax collection, falls by Rs 37 crore

**CHENNAI: The Greater Chennai Corporation (GCC) has collected Rs 334 crore property tax for the current fiscal year 2024 - 2025 till April 30.**

Observing that Rs 371 crore was collected in April 2023, an official stated that the Lok Sabha election had impacted the tax collection in the initial period.

"It was difficult to collect taxes during the last financial year (2023-2024) as the election dates were announced, however, we managed to collect the property tax. Similarly, we had a tough time collecting tax from the public within the stipulated period for the current fiscal year due to election work," a senior official told DT Next.

He further added, "So far, we have collected Rs 334 crore and we have given 5 percent incentives to those who paid the tax within the stipulated period. But compared to the previous year it has reduced by Rs 37 crore in April month. We have taken measures to intensify the tax collection from May."

Besides measures for collecting tax, the city corporation has taken various steps to collect penalty charges from the property owners and organisations who fail to pay the tax. The local body has decided to issue notice to the defaulters to pay property taxes on time.

In the 2023-2024 financial year, the property tax collection has increased by Rs 44 crore compared to the fiscal year 2022-2023.

The Chennai Corporation has collected Rs 1,600 crore property tax in the financial year 2023- 2024. The highest property tax of Rs 315 crore was paid in the Teynampet zone (zone 9). The local body has fixed a target to collect Rs 1,750 crore property tax in the city for the current fiscal year.

DT Next
11 - MAY 2024

# Erode again; screens displaying strongroom go blank for 2 hours

**COIMBATORE: A day after a CCTV developed a glitch in Government College of Engineering, where EVMs collected from across Erode Lok Sabha Constituency are kept, display screens showing the camera recordings went blank on Tuesday.**

Around 7 am, the screens showing the footage of the strongroom of Kumarapalayam constituency and its corridors went blank in the control room at the administrative block triggering some tense moments. On receiving information, M Sathish Kumar, Assistant Returning Officer and Revenue Divisional Officer, Erode, inspected and found the cameras to be functional as another screen kept before the strongroom showed the footage.

It was then found that the wire connecting the control room got disconnected resulting in screens to black out. The issue was rectified within 2 hours and the screens began to show the footage from 9 am.

This is the second incident of malfunctioning as on Sunday night one of the CCTVs fixed near the strongroom, where EVMs from Erode West Assembly constituency was kept had gone defunct around midnight. It was rectified within an hour.

Of the total 221 CCTVs installed, 48 cameras are fixed facing strongrooms and covering the corridor, while the remaining 173 cameras were kept around the college premises.

Meanwhile, Erode Lok Sabha constituency Returning Officer and Collector Raja Gopal Sunkara issued a notice to the contractor engaged in fixing and maintaining the camera network system seeking an explanation on frequent incidents of malfunction. He also sought for an examination of the entire network system and to ensure similar incidents of malfunctioning doesn't happen again.

**Explanation sought from contractor engaged in fixing and maintaining the camera network on frequent malfunctioning**

இந்து தமிழ் திசை

11 - MAY 2024

### கோவையில் நீக்கப்பட்டவர்களை இணைத்து

# வாக்களிக்க அனுமதிக்கும்படி உத்தரவிட முடியாது

**▶ உயர் நீதிமன்றம் மறுப்பு**

● சென்னை

கோவை மக்களவைத் தொகுதியில் பெயர் நீக்கம் செய்யப்பட்ட வாக்காளர்களை மீண்டும் பட்டியலில் இணைத்து வாக்களிக்க அனுமதிக்கும்படி உத்தரவிட முடியாது என உயர் நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் மருத்துவராகப் பணியாற்றிவரும் கோவை நஞ்சுண்டாபுரத்தைச் சேர்ந்த சுதந்திரகண்ணன், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், “கோவை மக்களவைத் தொகுதியில் வாக்களிக்க எனது மனைவி, மகளுடன் ஆஸ்திரேலியாவில் இருந்து கோவைக்கு வந்தேன். ஆனால் எனது பெயரும், எனது மனைவி பெயரும் வாக்காளர் பட்டியலில் இல்லை. கடந்த 2019 மக்களவைத் தேர்தல், 2021 சட்டப்பேரவைத் தேர்தல்களில் வாக்களித்துள்ள நிலையில் இந்த தேர்தலில் எங்களது பெயர் நீக்கப்பட்டுள்ளது. ஆனால் எங்களது மகள் பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளது.

இதேபோல எங்களது பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பாக தேர்தல் ஆணையத்துக்கு கடந்த ஏப்.15 அன்று மின்னஞ்சல் மூலமாக புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் இல்லை. எனவே வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட வாக்காளர்களை மீண்டும் பட்டியலில் சேர்த்து, எங்களையும் வாக்களிக்க அனுமதிக்க வேண்டும். அதுவரை கோவை மக்களவைத் தொகுதிக்கான தேர்தல் முடிவுகளை அறிவிக்க தடை விதிக்க வேண்டும்” என கோரியிருந்தார்.



இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.வி. கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி ஜி.சந்திரசேகரன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தேர்தல் ஆணையம் தரப்பில், “கடந்த ஜனவரி மாதம் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அப்போது மனுதாரர் கோவை தொகுதியில் வசிக்கவில்லை என்பதாலும், அவர் ஆஸ்திரேலியாவில் வசித்து வந்ததாலும் அவருடைய பெயர் நீக்கப்பட்டது. கடந்த 2021-ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலின்போதே மனுதாரரின் பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு விட்டது” என தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து நீதிபதிகள், “கடந்த ஜனவரி மாதம் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிட்டபோதே மனுதாரர் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. தற்போது தமிழகத்தில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடந்து முடிந்துவிட்ட நிலையில் மனுதாரர் கோரும் நிவாரணத்தை அளிக்க முடியாது” எனக்கூறி வழக்கை முடித்து வைத்துள்ளனர்.

The Madras High court rejects the special election at coimbatore & the Court has announce that they won't interfere in the EC's Action.

இந்து தமிழ் திசை

11 - MAY 2024

### தமிழகத்தில் வாக்காளர் பெயர் நீக்கப்பட்டதாக புகார்

# மக்களவை தேர்தல் வாக்கு எண்ணிக்கைக்கு பிறகு ஆய்வு

● தேர்தல் துறை அதிகாரி தகவல்

●சென்னை

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கப்பட்டதாக அளிக்கப்படும் புகார் தொடர்பாக மக்களவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை முடிந்ததும் ஆய்வு செய்யப்படும் என தேர்தல் துறை அதிகாரி தெரிவித்தார்.

கடந்த ஏப்.19-ம் தேதி தமிழகத்தில் நடைபெற்ற மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவின்போது, பல்வேறு பகுதிகளில் வாக்காளர்கள் பட்டியலில் பெயர் இல்லை என்று ஒரு சாராரும், நீக்கப்பட்டிருப்பதாக ஒரு சாராரும் தெரிவித்தனர். தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் அக்ரஹாரம் ஒன்றில் வசிக்கும் மக்கள் தங்கள் பெயர் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, வாக்குவாதம் செய்தனர். கோவையில் ஒரு லட்சம் வாக்காளர்கள் பெயர் நீக்கப்பட்டதாக பாஜக சார்பில் புகார் அளிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்தப் புகார்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் தேர்தல் முடிந்த மாநிலங்களின் எல்லைப்பகுதியில் உள்ள கண்காணிப்பை தளர்த்துவது தொடர்பாக தேர்தல் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

வாக்காளர் பட்டியலுக்கு வாக்காளர் பதிவு அலுவலர் (இஆர்ஓ) பொறுப்பாவார். வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகளின்போது, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை குறிப்பிட்ட கால இடைவெளியில் அழைத்து, சேர்க்கப்பட்ட பெயர்கள், நீக்கப்பட்ட பெயர்கள், முகவரி மாற்றம் இவை தொடர்பான விவரங்களை அவர் அளிப்பார். இந்த விவரங்கள் அனைத்தும் அரசியல் கட்சிகளின் அந்தந்தப் பகுதியில் உள்ள முகவர்களுக்குத் தெரியும். இதுதவிர, பொதுமக்கள் எப்போது வேண்டுமானாலும் தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இருக்கிறதா என்பதைப் பார்க்க முடியும். அத்துடன், பெயர் சேர்த்தல், நீக்கல் விண்ணப்பங்களையும் அளிக்க முடியும்.

வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கப்பட்டுள்ளது தொடர்பான புகார்கள் மாவட்ட தேர்தல் அதிகாரிகளிடம் அளிக்கப்பட்டாலோ, தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் அளிக்கப்பட்டாலோ, அந்த புகார்கள் வாக்காளர் பதிவு அலுவலருக்கு அனுப்பப்பட்டு, அவர்கள் ஆய்வு செய்வார்கள். இப்பணிகள் மக்களவைத் தேர்தல் முடிவடைந்ததும் தொடங்கப்படும்.

ஆன்லைனில் விண்ணப்பிக்கப்பட்டிருந்தாலும், முகாமில் விண்ணப்பம் வழங்கப்பட்டிருந்தாலும், அவை யாரால் பரிசீலிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டது என்ற விவரம் இருக்கும். மேலும், நீக்கப்பட்டிருந்தால் நீக்கத்துக்கு பரிந்துரைத்தவர் விவரமும் இருக்கும். எனவே, அதைக்கொண்டு என்ன நிகழ்ந்துள்ளது என்பதை அறிந்து கொள்ள இயலும். அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

வாக்காளர் பட்டியலுடன் ஆதார் இணைப்பு, கைபேசி எண் இணைப்பு தொடர்பான நீதிமன்ற அறிவுறுத்தல்கள் உள்ளன. தற்போது ஆதார், கைபேசி எண் பெறப்பட்டாலும், இணைக்கப்படுவதில்லை. இவ்வாறு இணைக்கப்பட்டால், பெரும்பாலான பிரச்சினைகள் தீர்ந்துவிடும். இரட்டை பதிவுகள் நீக்கப்படும். ஒருவர் பெயர் பட்டியலில் இருந்து நீக்கப்படும் போது கைபேசியில் தகவல் தெரிவிக்கவும் ஏதுவாக இருக்கும்.

**கண்காணிப்பு**

தமிழகத்தில் தேர்தல் பறக்கும் படை, நிலை கண்காணிப்புக்குழு கண்காணிப்பு அகற்றப்பட்டு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா மாநில எல்லைப்பகுதிகளில் மட்டும் அமல்படுத்தப்பட்டது.

தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல்படி, எந்த மாநிலத்தில் தேர்தல் முடிகிறதோ அந்த மாநில எல்லையில் கண்காணிப்பை அகற்றும் வகையில் மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ஒரு வேளை அந்த மாநிலத்தில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெற்றால் தேர்தல் முடியும்வரை கண்காணிப்பு தொடரும். இவ்வாறு தெரிவித்தார்.

The Election Department officer informs that he will ~~start~~ investigate the issue regarding the missing voters in the electoral roll.

இந்து தமிழ் திசை

11 - MAY 2024

# ரயிலில் ரூ.4 கோடி சிக்கிய விவகாரத்தில் கைதான 3 பேர் சிபிசிஐடி போலீஸ் முன் ஆஜர்

**நயினார் நாகேந்திரனையும் அழைக்க முடிவு**

● சென்னை

மக்களவைத் தேர்தல் நேர கண்காணிப்பின்போது நெல்லை ரயிலில் ரூ.4 கோடி சிக்கிய விவகாரம் தொடர்பாக, பணத்துடன் பிடிபட்ட 3 பேர் நேற்று சிபிசிஐடி போலீஸார் முன்னிலையில் ஆஜராகினர்.

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலையொட்டி தேர்தல் பறக்கும்படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அதன்படி, கடந்த 6-ம் தேதி சென்னை எழும்பூரிலிருந்து திருநெல்வேலி நோக்கி புறப்பட்ட நெல்லை விரைவு ரயிலில் உரிய ஆவணங்கள் இல்லாமல் எடுத்து செல்லப்பட்ட ரூ.4 கோடி பணத்தை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

பணத்தை கொண்டு சென்றதாக பாஜகவின் நெல்லை தொகுதி வேட்பாளரும் எம்எல்ஏவுமான நயினார் நாகேந்திரனின் ஆதரவாளர்களான சென்னை கொளத்தூர் திரு.வி.க.நகரைச் சேர்ந்த சதீஷ், அவரது தம்பி நவீன், தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் பகுதியை சேர்ந்த பெருமாள் ஆகிய 3 பேரை தாம்பரம் போலீஸார் கைது செய்தனர். இந்த பணத்தை நயினார் நாகேந்திரனுக்கு கொண்டு செல்வதாக அவர்கள் தெரிவித்தனர். இதை நயினார் நாகேந்திரன் திட்டவட்டமாக மறுத்தார்.

இந்நிலையில், தாம்பரம் மாநகர காவல்துறை சார்பில் நயினார் நாகேந்திரன், பாஜக நிர்வாகி கோவர்த்தனன் உட்பட 8 பேருக்கு சம்மன் அனுப்பப்பட்டது. அவர்களில் 3 பேர் ஆஜராகி விளக்கம் அளித்தனர்.

**பரிந்துரை**

இதற்கிடையே தாம்பரம் ஆணையர் அமல்ராஜின் பரிந்துரையை ஏற்று இவ்வழக்கின் விசாரணையை சிபிசிஐடி-க்கு மாற்றி டிஜிபி சங்கர் ஜிவால் உத்தரவிட்டார். இதன் தொடர்ச்சியாக தொடர்புடைய ஆவணங்கள் சிபிசிஐடி பிரிவு போலீஸார் வசம் ஒப்படைக்கப்பட்டன. இதன்பேரில் அப்பிரிவு காவல் ஆய்வாளர் லோகநாதன் 2 தினங்களுக்கு முன்னர் விசாரணையைத் தொடங்கினார்.

**சம்மன்**

தாம்பரம் போலீஸார் அளித்த ஆவணங்களின் அடிப்படையில் 4 பிரிவுகளில் சிபிசிஐடி போலீஸார் புதிதாக வழக்குப் பதிந்தனர். இதன் தொடர்சியாக, ரயிலில் பணத்துடன் பிடிபட்ட சதீஷ், நவீன், பெருமாள் ஆகிய 3 பேரிடம் நேரில் விசாரணை நடத்த அவர்களுக்கு சிபிசிஐடி போலீஸார் சம்மன் அனுப்பினர்.

இதன்தொடர்ச்சியாக நேற்று அவர்கள் 3 பேரும் சென்னை எழும்பூரில் உள்ள சிபிசிஐடி தலைமை அலுவலகத்தில் ஆஜராகினர். அவர்களிடம் இரவு 8.30 மணியைத் தாண்டியும் விசாரணை தொடர்ந்து நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து நயினார் நாகேந்திரனிடம் விசாரிக்க சம்மன் அனுப்பப்பட உள்ளதாக சிபிசிஐடி போலீஸார் தெரிவித்துள்ளனர்.

3 person arrested in the case of Rs 4 crore seized in the train appeared before the CBCID police & decided to call Nainar nagendran.

இந்து தமிழ் திசை
11 - MAY 2024

# வேட்பாளர்களின் முகவர்களுடன் ஆட்சியர் ஆய்வு

**காஞ்சிபுரம்**

காஞ்சிபுரம் மக்களவைத் தேர்தல் முடிந்து வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்ட அறையை வேட்பாளர்களின் முகவர்களுடன் மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி நேற்று ஆய்வு செய்தார்.

காஞ்சிபுரம் மக்களவைத் தேர்தல் முடிந்து வாக்குப் பதிவு இயந்திரங்கள் அண்ணா பொறியியல் கல்லூரியில் வைக்கப்பட்டுள்ளன. அங்கு 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அந்த இடங்களை மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி அவ்வப்போது ஆய்வு செய்து வருகிறார். வேட்பாளரின் முகவர்களுடன் சென்று நேற்று ஆய்வு செய்தார்.

**பாதுகாப்பு பணியில் கவனம்**

சீல் வைக்கப்பட்ட அறை சீல் வைக்கப்பட்ட படி உள்ளதா என்றும், அங்குள்ள கண்காணிப்பு கேமரா முறையாக வேலை செய்கிறதா என்றும் ஆய்வு செய்தார். பாதுகாப்பு பணிகளில் கவனமாக இருக்கும்படி அங்குள்ள போலீஸாரிடம் தெரிவித்தார். உடன் சென்ற வேட்பாளர்களின் முகவர்களும் சீல் வைக்கப்பட்ட அறைகள் எவ்வாறு உள்ளன என்பதை பார்த்தனர்.

The DEO, Kanchipuram has inspected the strong room along with the Party Agents.

தினத்தந்தி
1 - MAY 2024

### தேனி நாடாளுமன்ற தொகுதி

# வாக்கு எண்ணும் மையத்துக்குள் அத்துமீறி நுழைந்த வாலிபர் கைது

தேனி, மே.1-

தேனி நாடாளுமன்ற தொகுதிக்கான வாக்கு எண்ணும் மையத்துக்குள் அத்துமீறி நுழைந்த வாலிபர் கைது செய்யப்பட்டார்.

**வாக்கு எண்ணும் மையம்**

தேனி நாடாளுமன்ற தொகுதியில் தேர்தலின்போது பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், கட்டுப்பாட்டு கருவிகள் தேனி அருகே கொடுவிலார்பட்டியில் உள்ள கம்மவார் சங்க கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்ட வாக்கு எண்ணும் மையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டன.

மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்ட அறைகளுக்கு 'சீல்' வைக்கப்பட்டு துப்பாக்கி ஏந்திய துணை ராணுவ படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**அத்துமீறி நுழைந்த வாலிபர்**

வாக்கு எண்ணும் மையம் முழுவதும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, கட்டுப்பாட்டு அறையில் இருந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், வாக்கு எண்ணும் மையத்துக்குள் நேற்று முன்தினம் ஒரு வாலிபர் தனது மோட்டார் சைக்கிளில் வந்தார். போலீசார் அவரை நிறுத்த முயற்சித்தபோது போலீசாரின் தடையை மீறி உள்ளே நுழைந்தார். பின்னர் அவரை போலீசார் மடக்கிப் பிடித்து விசாரித்தனர்.

விசாரணையில் அவர் சீப்பாலக்கோட்டையைச்சேர்ந்த செல்வம் மகன் ராஜேஷ் கண்ணன் (வயது 27) என்பது தெரியவந்தது. வாக்கு எண்ணும் மையத்துக்குள் அத்துமீறி நுழைந்தது குறித்து அவரிடம் போலீசார் விசாரித்தபோது, 'இது எங்க ஏரியா. அப்படித்தான் வருவேன்' என்று கெத்தாக பேசியதோடு, அங்கிருந்த போலீசார், அரசு அலுவலர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும் கூறப்படுகிறது.



ராஜேஷ் கண்ணன்

**கைது**

மேலும் அவர் அதே கல்லூரியில் ஊழியராக வேலை பார்ப்பதாக கூறினார். இது பற்றி கல்லூரி நிர்வாகத்திடம் போலீசார் விசாரித்தபோது, அவர் சில ஆண்டுகளுக்கு முன்பு அங்கு ஊழியராக பணியாற்றியதாகவும், தற்போது அங்கு அவர் பணியாற்றவில்லை என்றும் தெரியவந்தது.

இதையடுத்து ராஜேஷ் கண்ணனை பழனிசெட்டிபட்டி போலீஸ் நிலையத்துக்கு போலீசார் அழைத்துச் சென்று விசாரித்தனர். இந்த சம்பவம் குறித்து கிராம நிர்வாக அதிகாரி மதுக்கண்ணன் புகார் கொடுத்தார்.

அதன்பேரில், 4 பிரிவுகளில் ராஜேஷ் கண்ணன் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர்.

**சிறையில் அடைப்பு**

அவர் அத்துமீறி நுழைந்ததற்கு அரசியல் காரணங்கள் எதுவும் உள்ளதா? என்ற கோணத்திலும் போலீசார் விசாரணை நடத்தினர். ஆனால், அப்படி எந்த காரணமும் இல்லை என்று தெரியவந்தது. இருப்பினும் அவர் முன்னுக்குப்பின் முரணாக பேசியதால், அவரிடம் தீவிர விசாரணை நடத்தினர். விசாரணையை தொடர்ந்து அவரை நேற்று தேனி ஜூடிசியல் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் போலீசார் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

27 year old Man was arrested for trespassing into a strong room at Cumbum in Tamil Nadu.

தினத்தந்தி

1 - MAY 2024

ஈரோடு நாடாளுமன்ற தொகுதி வாக்கு எண்ணும் மையத்தில்

# கண்காணிப்பு கேமரா வீடியோ காட்சித்திரையில் திடீர் கோளாறு

ஈரோடு, மே.1-

ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்கான வாக்கு எண்ணும் மையம் சித்தோடு அரசு என்ஜினீயரிங் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு கடந்த 28-ந்தேதி கண்காணிப்பு கேமரா பழுதானது. பின்னர் அது சரிசெய்யப்பட்டது.

இதற்கிடையே நேற்று காலை 7 மணி அளவில் நிர்வாக அலுவலக வளாகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையில் குமாரபாளையம் தொகுதிக்கான வீடியோ காட்சிகள் திரையில் தெரியவில்லை.

உடனே உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி சதீஷ்குமார் விரைந்து சென்று விசாரணை நடத்தினார். அப்போது கண்காணிப்பு கேமராவில் பழுது ஏற்படவில்லை என்பதும், குமாரபாளையம் சட்டமன்ற தொகுதிக்கான மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைக்கு வெளியே வைக்கப்பட்டிருந்த டி.வி.யில் கண்காணிப்பு கேமராக்களின் காட்சி பதிவுகள் இருந்ததும் தெரியவந்தது. அங்கிருந்து கட்டுப்பாட்டு அறைக்கு செல்லும் ஒயர் இணைப்பில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக கட்டுப்பாட்டு அறையின் டி.வி.யில் வீடியோ திரையில் தெரியவில்லை.

இதைத்தொடர்ந்து 2 மணி நேரத்துக்கு பிறகு காலை 9 மணி அளவில் முழுமையாக சரிசெய்யப்பட்டு வீடியோ காட்சிகள் திரையில் தெரிய தொடங்கின.

இந்தநிலையில், கண்காணிப்பு கேமராக்களை பொருத்திய ஒப்பந்ததாரருக்கு மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா விளக்கம்கேட்டு நோட்டீஸ் வழங்கியுள்ளார்.

CCTV Camera Repair in the Strong room at Erode the problem was solved in Two hours.

தினத்தந்தி
1 - MAY 2024

ஜூன் 1-ந்தேதி நடத்தப்படுமா?

# விக்கிரவாண்டி தொகுதிக்கு இடைத்தேர்தல் எப்போது?

## தேர்தல் அதிகாரி பதில்

சென்னை, மே.1-

விக்கிரவாண்டி தொகுதிக்கு இடைத்தேர்தல் ஜூன் 1-ந்தேதி நடத்தப்படுமா என்பதற்கு அதிகாரி பதில் அளித்துள்ளார்.

### எம்.எல்.ஏ. மரணம்

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதி எம்.எல்.ஏ.வாக (தி.மு.க.) இருந்தவர் புகழேந்தி. அவர் உடல்நலக்குறைவு காரணமாக கடந்த மாதம் 6-ந்தேதி உயிரிழந்தார். அதைத்தொடர்ந்து விக்கிரவாண்டி தொகுதி காலியாக இருப்பதாக தேர்தல் கமிஷன் அறிவித்தது.

ஒரு எம்.எல்.ஏ. உயிரிழந்தாலோ அல்லது பதவியை ராஜினாமா செய்தாலோ அந்த தொகுதிக்கு 6 மாத காலத்திற்குள் இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டும். எனவே விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தல் நடத்துவதற்கு இன்னும் கால அவகாசம் உள்ளது.

### கடைசி கட்டத்தில்...

தற்போது இந்தியா முழுவதும் நாடாளுமன்ற தேர்தல் 7 கட்டங்களாக நடைபெற்று வருகிறது. முதல் கட்டமாக கடந்த ஏப்ரல் 19-ந்தேதி தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நடந்து முடிந்தது. 2-ம் கட்ட தேர்தலும் சமீபத்தில் நடந்து முடிந்தது. 7-ம் கட்ட அதாவது கடைசி கட்ட நாடாளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு வரும் ஜூன் 1-ந்தேதி நடைபெறவுள்ளது. ஜூன் 4-ந்தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற்று தேர்தல் முடிவு அறிவிக்கப்பட உள்ளது.

இந்த சூழ்நிலையில் விக்கிரவாண்டி தொகுதிக்கு எப்போது இடைத்தேர்தலை நடத்தலாம்? என்பது குறித்து தேர்தல் கமிஷன் ஆய்வு செய்து வந்தது. விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தலை, கடைசி கட்ட நாடாளுமன்ற தேர்தலுடன் சேர்த்து நடத்தலாம் என்று தேர்தல் கமிஷன் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

### விரைவில் அறிவிப்பாணை

இதுபற்றி அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, 'விக்கிரவாண்டி தொகுதிக்கு இடைத்தேர்தலை நடத்துவதற்கு அதிக வாய்ப்புள்ளது. இறுதி கட்ட நாடாளுமன்ற தேர்தலுடன் சேர்த்து அதை நடத்த வேண்டும் என்றால், இந்த வாரத்திலேயே அதற்கான அறிவிப்பாணையை தேர்தல் கமிஷன் வெளியிட வேண்டும்.

வேட்புமனு தாக்கல் நாட்கள், வேட்புமனுவை திரும்பப் பெறுவதற்கான இறுதி தேதி உள்ளிட்ட விவரங்களை முன்னதாகவே வெளியிட வேண்டும். எனவே தேர்தல் கமிஷனின் அறிவிப்பாணையை விரைவில் எதிர்பார்க்கிறோம்' என்று கூறினார்.

News regarding Vikravandi by-election will it held by June 1st ?

தினமலர்

1 - MAY 2024

# அ.தி.மு.க., பிரமுகருக்கு ஐகோர்ட் முன்ஜாமின்

சென்னை, மே 1–

தேர்தல் நடத்தை விதியை மீறியதாக பதிவான வழக்கில், நீலகிரி மாவட்ட அ.தி.மு.க., செயலருக்கு, சென்னை உயர் நீதி மன்றம் முன்ஜாமின் வழங்கி உள்ளது.

நீலகிரி லோக்சபா தொகுதியில் போட்டியிட, பா.ஜ., வேட்பாளர் எல்.முருகன், அ.தி.மு.க., வேட்பாளர் லோகேஷ் தமிழ் செல்வன் ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்ய, உதகையில் உள்ள காபி ஹவுஸ் பகுதியில் இருந்து, ஒரே நேரத்தில் இரு கட்சியினரும் ஊர்வலமாக செல்ல கூடினர்.

அப்போது, பா.ஜ., தொண்டர்களுக்கும், அ.தி.மு.க., தொண்டர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

நடத்தை விதிகளை மீறி போராட்டத்தில் ஈடுபட்டது; பட்டாசு வெடித்தது, போலீசாரை பணி செய்ய விடாமல் தடுத்தது உள்ளிட்ட பிரிவுகளின் கீழ், உதகை போலீசார் வழக்குப் பதிவு செய்தனர்.

அ.தி.மு.க., மாவட்ட செயலர் கப்பச்சி வினோத் உள்ளிட்ட, 20 அ.தி.மு.க.,வினருக்கு எதிராக நான்கு பிரிவுகளின் கீழும், மாவட்ட பா.ஜ., தலைவர் மோகன் ராஜுக்கு எதிராக இரண்டு பிரிவுகளின் கீழும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்குகளில் முன்ஜாமின் கோரி, உயர் நீதிமன்றத்தில் கப்பச்சி வினோத் மனுத் தாக்கல் செய்தார்.

மனு, நீதிபதி தமிழ் செல்வி முன், விசாரணைக்கு வந்தது. கப்பச்சி வினோத்துக்கு முன் ஜாமின் வழங்கியும், விசாரணைக்கு தேவைப்படும் போது ஆஜராகும்படியும் நிபந்தனை விதித்து, நீதிபதி உத்தரவிட்டார்.

The High court has given the bail for ooty ADMK candidate of MCC violation in Nilgiri District.

தினமலர்

1 - MAY 2024

# 2வது நாளும் தொடர்ந்த 'சிசிடிவி' பழுது ஈரோடு தொகுதி வேட்பாளர்கள் அதிர்ச்சி

**ஈரோடு, மே 1–**

ஈரோடு லோக்சபா தொகுதியில், கடந்த 19ல் பதிவான ஓட்டுகள் அடங்கிய மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்கள், சித்தோடு அரசு பொறியியல் கல்லூரியில் உள்ள அறைகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

### 1 மணி நேரத்துக்கு பின்

மத்திய துணை பாதுகாப்பு படை, அதிரடிப் படை, உள்ளூர் போலீசார் என, 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. 6 சட்டசபை தொகுதிக்கான இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அறையையும், எட்டு 'சிசிடிவி' கேமரா வாயிலாக கண்காணிக்கின்றனர்.

மொத்தம், 221 'சிசிடிவி' கேமராக்கள் வாயிலாக அவற்றை கட்டுப்பாட்டு அறையில் உள்ள, எல்.இ.டி., – 'டிவி'களில் வேட்பாளர்கள், அவர்களது முகவர்கள், அரசு அலுவலர்கள், 24 மணி நேரமும் கண்காணிக்கின்றனர்.

இந்நிலையில், ஈரோடு மேற்கு தொகுதிக்கான, 'சிசிடிவி' நேற்று முன்தினம் பழுதாகி, காட்சிகள் தெரியாமல் போனது. தகவல் அறிந்து, மாற்று, 'சிசிடிவி' பொருத்தப்பட்டது.

பழுதான, 'சிசிடிவி' கேமரா அகற்றப்பட்டு, 1 மணி நேரத்துக்கு பின் மீண்டும் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இந்நிலையில், நேற்று காலை, 7:00 மணிக்கு குமாரபாளையம் சட்டசபை தொகுதியை கண்காணிக்க வைக்கப்பட்ட, 40க்கும் மேற்பட்ட கேமராவில் பதிவாகும் காட்சிகள், கட்டுப்பாட்டு அறையில் உள்ள, 'டிவி'களில் தெரியவில்லை.

### கள ஆய்வு

இதுபற்றி, வேட்பாளர்களின் பிரதிநிதிகள் தெரிவித்த புகாரின் அடிப்படையில் சரி செய்து காலை, 9:00 மணிக்கு மேல் காட்சிகள் மீண்டும் ஒளிபரப்பானது.

கலெக்டர் ராஜகோபால் சுன்கரா வெளியிட்ட அறிக்கை:

நேற்று காலை, 7:00 மணிக்கு கட்டுப்பாட்டு அறையில், குமாரபாளையம் சட்டசபை தொகுதிக்கான, 'டிவி' சாதனங்கள், 'சிசிடிவி' பதிவுகள் தெரியவில்லை என தகவல் கிடைத்தது.

இணைப்புகள் சரி செய்யப்பட்டு காலை, 9:00 மணிக்கு கட்டுப்பாட்டு அறையில் உள்ள தொலைக்காட்சி சாதனத்தில் ஒளிபரப்பு தெரிந்தது.

இதுபற்றி, நியமனம் செய்யப்பட்டுள்ள ஒப்பந்ததாரருக்கு நோட்டீஸ் அனுப்பி, மீண்டும் இணைப்புகளை கள ஆய்வு செய்து அறிக்கை சமர்பிக்கவும், இனி வரும் காலங்களில் இதுபோன்ற தவறுகள் நிகழாவண்ணம் இருக்க உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு உள்ளன.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

News regarding repair of CCTV camera in Erode District Strong room

தினமலர்
1 - MAY 2024

# கோவை தொகுதி தேர்தல் முடிவு அறிவிக்க தடை எதுவும் இல்லை

சென்னை, மே 1–



கோவை லோக்சபா தொகுதியில் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்களின் பெயர்களை சேர்த்து, ஓட்டுப்பதிவு செய்ய அனுமதிக்க கோரிய மனுவை, சென்னை உயர்நீதிமன்றம் நிராகரித்தது.

கோவை நஞ்சுண்டபுரத்தைச் சேர்ந்தவர் சுதந்திர கண்ணன்; ஆஸ்திரேலியாவில் மருத்துவராக பணிபுரிகிறார். லோக்சபா தேர்தலில் ஓட்டுப்பதிவு செய்வதற்காக, கோவை வந்தார். ஆனால், வாக்காளர் பட்டியலில் அவரது பெயரும், மனைவி பெயரும் நீக்கப்பட்டிருந்தது; மகள் பெயர் மட்டுமே உள்ளது.

இதையடுத்து, தங்கள் பகுதியைச் சேர்ந்தவர்களில் ஆயிரக்கணக்கான பெயர்கள் நீக்கப்பட்டு இருப்பதாகவும், விதிகளை முறையாக பின்பற்றாமல் நீக்கி உள்ளனர் என்பதால், நீக்கப்பட்டவர்களை சேர்த்து ஓட்டுப்பதிவு செய்ய அனுமதிக்கவும், அதுவரை கோவை லோக்சபா தேர்தல் முடிவை அறிவிக்க தடை விதிக்கவும் கோரி, உயர் நீதிமன்றத்தில் சுதந்திர கண்ணன் மனுத்தாக்கல் செய்தார்.

மனு, தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபுர்வாலா, நீதிபதி சந்திரசேகரன் அடங்கிய, 'முதல் பெஞ்ச்' முன், விசாரணைக்கு வந்தது.

தேர்தல் ஆணையம் தரப்பில், வழக்கறிஞர் நிரஞ்சன் ஆஜராகி, "கடந்த ஜனவரியில், வாக்காளர் இறுதி பட்டியல் வெளியிடப்பட்டது. மனுதாரர் ஆஸ்திரேலியாவில் வசிக்கிறார். 2021 சட்டசபை தேர்தலின் போதே, வாக்காளர் பட்டியலில் இருந்து மனுதாரர் பெயர் நீக்கப்பட்டு விட்டது," என்றார்.

இதையடுத்து, 'இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிட்டபோது, மனுதாரர் தரப்பில் எந்த ஆட்சேபனையும் இல்லை. தற்போது ஓட்டுப்பதிவு முடிந்து விட்டது. இந்நிலையில், எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாது' என, முதல் பெஞ்ச் உத்தரவிட்டது.

இதனால், கோவை தொகுதி தேர்தல் முடிவை அறிவிக்க எந்த தடையும் இல்லை என்பது தெளிவாகியுள்ளது.

News regarding High court rejection of repolling at Coimbatore after the including of missing voters

தினமலர்

11 - MAY 2024

# வாக்காளர்கள் பெயர் நீக்கம் 'ரிசல்ட்'டுக்கு பின் விசாரணை

**சென்னை, மே 1–**

வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கப்பட்டது தொடர்பான புகார்களை, ஓட்டு எண்ணிக்கை முடிந்த பின் விசாரிக்க, தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து, தேர்தல் அதிகாரிகள் கூறியதாவது:

வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதா என்பதை சரிபார்த்து, பெயர் இல்லை என்றால் விண்ணப்பிக்கும்படி, பல முறை தேர்தல் கமிஷன் சார்பில் அறிவிப்பு வெளியிடப்படுகிறது. அப்போது, பலர் அமைதியாக இருந்து விடுகின்றனர். தேர்தல் நேரத்தில் பெயர் இல்லை என்கின்றனர்.

கடந்த முறை ஓட்டளித்தவர்கள் பெயர் இம்முறை நீக்கப்பட்டிருப்பதாக, பல புகார்கள் வந்துள்ளன. ஒருவர் இடம் மாறி செல்வதாக விண்ணப்பித்தால், வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்கப்படும்.

இதுதவிர, ஒரு வாக்காளர் அளித்துள்ள முகவரியில் இல்லை என்றாலும், பெயர் நீக்கம் செய்யப்படும். எனவே, பெயர் நீக்கம் குறித்து தனிப்பட்ட நபர்கள் அளிக்கும் புகார்கள் குறித்து, ஓட்டு எண்ணிக்கை முடிந்த பின் விசாரிக்க, வாக்காளர் பட்டியல் தயாரிப்பு அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

விசாரணையில் எதற்காக சம்பந்தப்பட்ட வாக்காளர் பெயர் நீக்கப்பட்டது என்பது தெரிய வரும். அதன் விபரம் அவருக்கு தெரிவிக்கப்படும். அரசியல் கட்சியினர் அளித்த புகார்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும். ஓட்டு எண்ணிக்கை முடிந்த பின், பெயர் நீக்கம் செய்யப்பட்டவர்கள் விண்ணப்பம் அளித்தால், மீண்டும் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

The EC informs that they will investigate the issue regarding the missing voters in the electoral roll.

தினமலர்

1 - MAY 2024

# இறுதிகட்ட லோக்சபா தேர்தலுடன் விக்கிரவாண்டி இடைத்தேர்தல்?

**சென்னை, மே 1–**

லோக்சபா தேர்தலில், இறுதி கட்டமாக நடத்தப்படும் ஏழாம் கட்ட ஓட்டுப்பதிவுடன், விக்கிரவாண்டி சட்டசபை தொகுதிக்கும் இடைத்தேர்தல் நடத்தப்படுமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தி.மு.க., – எம்.எல்.ஏ., புகழேந்தி மறைவு காரணமாக, அத்தொகுதி, ஏப்ரல், 6 முதல் காலியாக உள்ளது. அதன் விபரத்தை, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹூ, தேர்தல் கமிஷனுக்கு முறைப்படி தெரியப்படுத்தியுள்ளார்.

தற்போது நாடு முழுதும் லோக்சபா தேர்தல், ஏழு கட்டமாக நடத்தப்படுகிறது. தமிழகம் உட்பட சில மாநிலங்களில், முதல் கட்ட தேர்தல் கடந்த மாதம் 19ம் தேதி நடந்தது. இரண்டாம் கட்ட தேர்தல், 26ம் தேதி நடந்தது. மூன்றாம் கட்ட தேர்தல், வரும் 7ம் தேதி நடக்க உள்ளது. ஏழாம் கட்ட தேர்தல், ஜூன் 1ல் நடக்க உள்ளது.

ஏழாம் கட்ட தேர்தலுக்கான அறிவிக்கையை, தேர்தல் ஆணையம் வரும் 7ல் முறைப்படி அறிவிக்க உள்ளது. அன்றைய தினம், வேட்பு மனு தாக்கல் துவங்கும்; ஜூன் 1ல் ஓட்டுப்பதிவு நடக்கும்.

அதேபோல், அந்த தேதியில், விக்கிரவாண்டி சட்டசபை தொகுதிக்கு இடைத்தேர்தல் நடத்த தேர்தல் கமிஷன் முடிவு செய்தால், அதற்கு முன்னதாகவே அறிவிப்பை வெளியிட வேண்டும். அதன்பின், வரும் 7ல் மனு தாக்கல் துவங்கப்பட்டு, ஜூன் 1ல் ஓட்டுப்பதிவு நடத்த வேண்டும். அதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்பது தெரியவில்லை.

இதுகுறித்து, தேர்தல் அதிகாரிகள் கூறியதாவது:

விக்கிரவாண்டி தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டால், தேர்தல் நடத்த தேவையான ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் இருப்பு உள்ளன. இடைத்தேர்தலை எப்போது நடத்துவது என்பதை, தேர்தல் கமிஷன் தான் முடிவு செய்யும்.

ஏழாம் கட்ட லோக்சபா தேர்தலுடன், விக்கிரவாண்டி இடைத்தேர்தலை நடத்துவதாக இருந்தால், ஓரிரு நாளில் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும். ஏனெனில் ஏழாம் கட்ட தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் மே 7ம் தேதி துவங்குகிறது. அன்றைய தினமே, வேட்பு மனு தாக்கல் துவங்கி விடும்.

தேர்தல் நடத்த அறிவிப்பு வெளியிட்டு, குறைந்தபட்சம், 30 நாட்கள் அவகாசம் அளிக்க வேண்டும்.

எனவே, இடைத்தேர்தல் நடத்துவதாக இருந்தால், உடனடியாக தனி அறிவிப்பு வெளியிடப்படும். இல்லையெனில் லோக்சபா தேர்தலுக்கு பின் தனியே அறிவிக்கப்பட்டு, இடைத்தேர்தல் நடத்தப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## இது சரியான நேரம் அல்ல!

விக்கிரவாண்டி சட்டசபை தொகுதிக்கான இடைத்தேர்தலை, லோக்சபா கடைசி கட்ட தேர்தல் நடக்கும் ஜூன் 1ல் நடத்த, தேர்தல் கமிஷன் முடிவு செய்திருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன. விக்கிரவாண்டி இடைத்தேர்தலுக்கு, இது சரியான நேரம் அல்ல; அதற்கான அவகாசமும் இல்லை.

தமிழகத்தில், 10 நாட்களாக கடுமையான வெப்ப அலை வீசுகிறது. மே 4ல் துவங்கும் கத்தரி வெயில் காலத்தில், 116 டிகிரி பாரன்ஹீட் வரை வெப்பநிலை பதிவாகும் என்று, வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. இத்தகைய சூழலில் பிரசாரம் செய்தால், பல்வேறு உடல்நல பாதிப்புகள் ஏற்படும். வெப்ப மயக்க நோய் ஏற்பட்டால் உயிரிழப்பு கூட ஏற்படலாம்.

எனவே, செப்டம்பர், அக்டோபரில் நடக்கவுள்ள ஜம்மு – காஷ்மீர், ஹரியானா சட்டசபை தேர்தலோடு, விக்கிரவாண்டி இடைத்தேர்தலையும் நடத்தலாம். விக்கிரவாண்டி இடைத்தேர்தல் தேதியை தேர்தல் கமிஷன் தன்னிச்சையாக தீர்மானிக்க கூடாது. தமிழக அரசு, கட்சிகளுடன் கலந்து பேசிதான், தேதியை தீர்மானிக்க வேண்டும்.



– ராமதாஸ்,
பா.ம.க., நிறுவனர்.

News regarding Vikravandi by-election.

தினமலர்
1 - MAY 2024

தேனி

## ஓட்டு எண்ணிக்கை மையத்தில் அத்துமீறி நுழைந்தவர் கைது

பழனிசெட்டிப்பட்டி, மே 1–

தேனி லோக்சபா தொகுதி தேர்தலில் பயன்படுத்தப்பட்ட மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்கள், கொடுவிலார்பட்டியில் உள்ள தேனி கம்மவார் சங்க கல்லுாரியில் பாதுகாக்கப்படுகிறது. இம்மையத்தில் துணை ராணுவப்படையினர், ஆயுதப்படை மற்றும் உள்ளூர் போலீசார் என, 250 பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். கண்காணிப்பிற்காக 200 கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.



ராஜேஷ் கண்ணன்

இந்நிலையில், ஓட்டு எண்ணும் மைய வளாகத்திற்குள் நேற்று முன்தினம், தேனி மாவட்டம் சீப்பாலக்கோட்டையை சேர்ந்த ராஜேஷ்கண்ணன், 27, என்பவர், டூ – வீலரில் உள்ளே நுழைந்தார்.

அவரை தடுத்து விசாரித்த வி.ஏ.ஓ., மதுக்கண்ணன் மற்றும் போலீசாரிடம், தனக்கு தெரிந்தவர்கள் அங்கு பணி புரிவதாக கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டு அவர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தார்.

பழனிசெட்டிப்பட்டி போலீசார் ராஜேஷ் கண்ணனை கைது செய்தனர்.

27 years old men was arrested for trespassing into a strong room at Cumbum in Tamil Nadu.

தினமணி

11 - MAY 2024

# தென்காசி தொகுதியில் 73 சிசிடிவிக்கள் செயலிழப்பு

தென்காசி, ஏப். 30: தென்காசி மக்களவைத் தொகுதி வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள கல்லூரியில் 73 சிசிடிவி கேமராக்கள் செயலிழந்தன.

தென்காசி மக்களவைத் தொகுதிக்கு கடந்த ஏப்.19இல் தேர்தல் நடைபெற்றது. பின்னர், வாக்குப் பதிவு இயந்திரங்கள் கொடிக்குறிச்சி தனியார் கல்லூரியில் 3 அடுக்குபாதுகாப்புடன், முத்திரையிடப்பட்ட பாதுகாப்பு அறையில் 24 மணி நேர கண்காணிப்பில் வைக்கப்பட்டன.

மேலும், வாக்குப்பதிவு இயந்திரங்கள் அறை உள்பட கல்லூரி வளாகத்தில் 209 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன.

அவற்றில் 73 கேமராக்கள் செவ்வாய்க்கிழமை பிற்பகலில் செயலிழந்தன.

இதுகுறித்து மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான ஏ.கே.கமல்கிஷோர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: இடியுடன் கூடிய பலத்த மழையின் காரணமாக கண்காணிப்பு கேமராக்கள் செயலிழந்துள்ளன. உடனடியாக தொழில்நுட்ப வல்லுநர்கள் வரவழைக்கப்பட்டு வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகளைச் சுற்றிலும் செயலிழந்த கேமராக்கள் சரிசெய்யப்பட்டு மாலை 6.30 மணியளவில் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டன.

மேலும், வாக்கு எண்ணும் மையத்தின் வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள செயலிழந்த கேமராக்களை சரி செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள முத்திரையிடப்பட்ட அறை மற்றும் வாக்குப் பதிவு இயந்திரங்கள் மூன்றடுக்கு காவல் பாதுகாப்புடன் பாதுகாப்பாக உள்ளன என்றார் அவர்.

73 cctv camera repair at tenkasi district

தினமணி

1 - MAY 2024

# ரயிலில் ரூ.4 கோடி சிக்கிய வழக்கு: மூவரிடம் சிபிசிஐடி விசாரணை

சென்னை, ஏப். 30: நெல்லை விரைவு ரயிலில் ரூ. 3.98 கோடி பறிமுதல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பாக 3 பேரிடம் சிபிசிஐடி அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை விசாரணை நடத்தினர்.

சென்னை எழும்பூரில் இருந்து திருநெல்வேலிக்கு கடந்த 6-ஆம் தேதி புறப்பட்டுச் சென்ற நெல்லை விரைவு ரயிலின் எஸ்-7 பெட்டியில் பயணம் செய்த நயினார் நாகேந்திரனின் ஆதரவாளர்கள் சென்னை கொளத்தூர் திரு. வி.க.நகரைச் சேர்ந்த சதீஷ், அவரது சகோதரர் நவீன், தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் பகுதியைச் சேர்ந்த பெருமாள் ஆகிய 3 பேரும் வைத்திருந்த ரூ.3,98,91,500 ரொக்கத்தை தாம்பரம் ரயில் நிலையத்தில் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.



(கோப்புப் படம்)

விசாரணையில்,திருநெல்வேலி மக்களவைத் தொகுதியில் பாஜக சார்பில் போட்டியிட்ட நயினார் நாகேந்திரன் செலவுக்காக பணம் கொண்டு செல்லப்பட்டது தெரியவந்தது. அதன் பின்னர், 3 பேர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டனர். இது தொடர்பாக தாம்பரம் மாநகர காவல் துறை வழக்குப் பதிவு செய்து,விசாரித்தனர்.

**மூவரிடம் விசாரணை:** முக்கியத்துவம் கருதி இந்த வழக்கின் விசாரணை சிபிசிஐடிக்கு கடந்த 26-ஆம் தேதி மாற்றப்பட்டது. தாம்பரம் மாநகர காவல் துறை வழங்கிய வழக்குத் ஆவணங்களை அடிப்படியாக சிபிசிஐடி அதிகாரிகள், பணத்துடன் பிடிபட்ட மூவர் மீது 4 பிரிவுகளின் வழக்குப் பதிவு செய்தனர்.

மேலும் 3 பேரையும் விசாரணைக்கு ஆஜராகும்படி சிபிசிஐடி அழைப்பாணை அனுப்பியது. இதையடுத்து 3 பேரும் சென்னை எழும்பூரில் உள்ள சிபிசிஐடி தலைமை அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நண்பகல் நேரில் ஆஜராகினர். அவர்களிடம் தனித்தனியாக சிபிசிஐடி அதிகாரிகள் விசாரணை செய்து, வாக்குமூலம் பெற்றனர். அதை அவர்கள் விடியோவாக பதிவு செய்தனர். இரவு 9 மணியைக் கடந்தும் விசாரணை நடைபெற்றது. இந்த வழக்குத் தொடர்பாக மேலும் சிலரிடம் சிபிசிஐடி அதிகாரிகள் விசாரணை நடத்த உள்ளனர்.

3 person appeared before the CBCID police for 4 crore Seized at tambaram.

தினமணி

1 - MAY 2024

மக்களவைத் தேர்தல்

# முதல் கட்டம் 66.14%, 2–ஆம் கட்டம் 66.71% வாக்குப் பதிவு

நமது நிருபர்

புது தில்லி, ஏப். 30: மக்களவைத் தேர்தலில் முதல்கட்ட வாக்குப் பதிவை எதிர்கொண்ட தமிழகத்தின் 39 தொகுதிகள், புதுச்சேரியின் ஒரு தொகுதி உள்பட 102 தொகுதிகளில் 66.14 சதவீத வாக்குகளும், 88 தொகுதிகளுக்கு நடைபெற்ற இரண்டாம் கட்ட வாக்குப் பதிவில் 66.71 சதவீத வாக்குகளும் பதிவானதாக தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

மக்களவைக்கு ஏழு கட்டங்களாக ஏப்ரல் 19, 26, மே 7, 13, 20, 25, ஜூன் 1 ஆகிய தேதிகளில் வாக்குப் பதிவு நடைபெறுகிறது. இதில் முதலிரண்டு தேர்தலில் பதிவான வாக்குகள் சதவீதம் தொடர்பாக மாறுபட்ட தகவல்கள் வெளிவந்த நிலையில் அதிகாரபூர்வமாக எத்தனை சதவீத வாக்குகள் பதிவாகின என்ற விவரத்தை தேர்தல் ஆணையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டது.



இதன்படி ஏப்ரல் 19–ஆம் தேதி முதல்கட்டத் தேர்தலில் 66.14 சதவீத வாக்குகள் பதிவாகின. அதில் ஆண் வாக்காளர்கள் 66.22 சதவீதம், பெண் வாக்காளர்கள் 66.07 சதவீதம், மூன்றாம் பாலினத்தவர் 31.32 சதவீதம்.

ஏப்ரல் 26–ஆம் தேதி நடந்த இரண்டாம் கட்டத் தேர்தலில் 66.71 சதவீத வாக்குகள் பதிவாயின. அதில், ஆண் வாக்காளர்கள் 66.9 சதவீதம் , பெண் வாக்காளர்கள் 66.42 சதவீதம், மூன்றாம் பாலினத்தவர் 23.86 சதவீதம்.

2019 மக்களவைத் தேர்தலுடன் ஒப்பிடுகையில், இந்தத் தேர்தலின் முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட வாக்குப் பதிவின்போது பதிவான வாக்குகள் விகிதம் சற்று குறைந்துள்ளது. 2019– ஆம் ஆண்டில், முதல் மற்றும் இரண்டாம் கட்ட வாக்குப் பதிவு முறையே 69.43 சதவீதம் மற்றும் 69.17 சதவீதமாக இருந்தது.

முதல்கட்ட வாக்குப் பதிவின் போது, லட்சத்தீவில் அதிகபட்சமாக 84.16 சதவீதம் வாக்குகள் பதிவாகின. அதே நேரத்தில் ஏப்ரல் 19– ஆம் தேதி தேர்தலை எதிர்கொண்ட 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் குறைந்தபட்சமாக பிகாரில் 49.26 சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளதை தேர்தல் ஆணைய புள்ளிவிவரம் மூலம் அறிய முடிகிறது.

இரண்டாம் கட்ட வாக்குப் பதிவின்போது, மணிப்பூரில் அதிகபட்சமாக 84.85 சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளன. அதேசமயம் உத்தர பிரதேசத்தில் 55.19 சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளன.

News regarding 66.14% in the 1st phase & 66.71% of polling in 2nd phase.

தினமணி

1 - MAY 2024

# நடத்தை விதி மீறல்: இதுவரை ரூ.179 கோடி ரொக்கம் பறிமுதல்

**சென்னை, ஏப். 30:** தமிழகத்தில் இதுவரை ரூ. 179 கோடி ரொக்கப் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகதேர்தல் துறைதெரிவித்துள்ளது.

வாக்குப் பதிவு முடிந்த பிறகும், தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் ஆங்காங்கே வாகன சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட மார்ச் 16-ஆம் தேதி முதல் கடந்த 28-ஆம் தேதி வரையிலான காலத்தில் மட்டும் உரிய ஆவணங்கள் இல்லாமல் எடுத்துச் செல்லப்பட்ட ரூ.179 கோடி ரொக்கப் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், ரூ. 8.86 கோடி மதிப்பிலான மதுபானங்களும், ரூ.1.36 கோடி மதிப்புடைய போதைப் பொருள்களும், ரூ.1,083 கோடி மதிப்பிலான ஆபரணங்களும், ரூ.35.80 கோடி மதிப்புடைய பரிசுப் பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அவற்றின் மொத்த மதிப்பு ரூ.1,309.52 கோடி என்று தேர்தல் துறை வெளியிட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

As of Now 179 Crore were seized in over all Tamilnadu.

தினகரன்

1 - MAY 2024

₹4 கோடி பறிமுதல் செய்யப்பட்ட வழக்கு

# ஓட்டல் மேலாளர் உள்பட 3 பேரிடம் நள்ளிரவு வரை சிபிசிஐடி விசாரணை

சென்னை, மே 1: தாம்பரம் ரயில் நிலையத்தில் ₹4 கோடி பறிமுதலில் ஓட்டல் மேலாளர் சதீஷ் உள்பட 3 பேரிடம் சிபிசிஐடி போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். நள்ளிரவு வரை நீடித்த விசாரணையை தொடர்ந்து நயினார் நாகேந்திரனுக்கு சம்மன் அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

நாடாளுமன்ற தேர்தலின் போது பறக்கும் படையினருக்கு வந்த ரகசிய தகவலின்படி கடந்த மார்ச் 26ம் தேதி தாம்பரம் ரயில் நிலையத்தில் நெல்லை செல்லும் எக்ஸ்பிரஸ் ரயிலில் தேர்தல் பறக்கும் படையினர் கணக்கில் வராத ₹4 கோடி ரொக்கத்தை பறிமுதல் செய்தனர். அதை கொண்டு வந்த பாஜ வேட்பாளர் நயினார் நாகேந்திரன் ஓட்டல் மேலாளரும், பாஜ உறுப்பினரான சதீஷ், நவீன், பெருமாள் ஆகியோர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடப்பட்டனர்.




இதுகுறித்து தாம்பரம் போலீசார் விசாரணை நடத்தி வந்த நிலையில், ₹4 கோடி விவகாரத்தில் பல முக்கிய பிரமுகர்களுக்கு நேரடி தொடர்பு இருப்பது தெரியவந்ததால் சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டது.

இதையடுத்து சிபிசிஐடி போலீசார் நயினார் நாகேந்திரன் ஓட்டல் மேளாளர் சதீஷ், அவரது சகோதரர் நவீன், லாரி டிரைவர் பெருமாள் ஆகியோர் மீது 4 சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், ₹4 கோடி ரொக்கம் குறித்து விளக்கம் அளிக்க கோரி ஓட்டல் மேலாளர் சதீஷ் உட்பட 3 பேருக்கும் சம்மன் அனுப்பப்பட்டது. அவர்கள் நேற்று மதியம் 12 மணிக்கு எழும்பூரில் உள்ள சிபிசிஐடி தலைமை அலுவலகத்தில் விசாரணை அதிகாரி முன்பு ஆஜராகினர்.

அப்போது, ₹4 கோடி பணம் யார் கொடுத்தது, அவ்வளவு பணத்தை தேர்தல் நேரத்தில் நெல்லைக்கு கொண்டு செல்ல வேண்டிய அவசியம் என்ன? சென்னையில் யாரிடம் இருந்து இந்த பணம் மொத்தமாக பெறப்பட்டது என 100க்கும் மேற்பட்ட கேள்விகளை கேட்டதாக கூறப்படுகிறது. அதற்கு 3 பேரும் நள்ளிரவு வரை அளித்த பதிலை சிபிசிஐடி போலீசார் வாக்குமூலமாக பதிவு செய்தனர். அந்த வாக்குமூலத்தின் படி நெல்லை பாஜ வேட்பாளர் நயினார் நாகேந்திரனுக்கு சிபிசிஐடி சார்பில் சம்மன் அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

3 person appeared before the CBCID police & started the investigation

தினகரன்

1 - MAY 2024

# விக்கிரவாண்டி தொகுதிக்கு இடைத்தேர்தல் எப்போது?




சென்னை, மே 1: விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் தொடர்பான அறிவிப்பு இந்த வாரத்தில் வெளியாக வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியானது.

விக்கிரவாண்டி தொகுதி திமுக சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் புகழேந்தி. இவர் விழுப்புரம் தெற்கு மாவட்ட திமுக செயலாளராகவும் பதவி வகித்து வந்தார். 71 வயதான புகழேந்தி உடல்நலக்குறைவால், சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். பின்னர் வீடு திரும்பிய அவர் நாடாளுமன்ற தேர்தல் பிரசார பணிகளில் ஈடுபட்டு வந்தார்.

இந்நிலையில் கடந்த மாதம் 5ம் தேதி விழுப்புரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசிய பிரசார கூட்டத்தில் பங்கேற்ற புகழேந்தி எம்எல்ஏ திடீரென மயங்கி விழுந்தார். இதையடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர், ஏப்ரல் 6ம் தேதி காலை உயிரிழந்தார். அவரது திடீர் மரணம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவரது மறைவை தொடர்ந்து கடந்த மாதம் 8ம் தேதி விக்கிரவாண்டி தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டது.

தற்போது நாடு முழுவதும் நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 7 கட்டங்களாக நடைபெறுகிறது. இதில் கடந்த மாதம் 19ம் தேதி முதல் கட்டத்திலேயே தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 மக்களவை தொகுதிகளுக்கும் தேர்தல் நடந்து முடிந்தது.

இதைத்தொடர்ந்து கடந்த 26ம் தேதி நடைபெற்ற இரண்டாம் கட்ட தேர்தலில் கேரளா, கர்நாடகா உள்ளிட்ட 13 மாநிலங்களில் வாக்குப்பதிவு நடைபெற்றது. இன்னும் 5 கட்ட தேர்தல்கள் எஞ்சியுள்ள நிலையில் 7வது கட்ட தேர்தல் ஜூன் 1ம் தேதி நடக்க உள்ளது. இந்த இறுதிக்கட்ட தேர்தலின் போது, விக்கிரவாண்டி தொகுதிக்கும் தேர்தல் நடைபெறும் என கூறப்படுகிறது. இதுதொடர்பான அறிவிப்பை தேர்தல் ஆணையம் இந்த வாரத்தில் வெளியிடும் என தகவல் வெளியாகியுள்ளது.

News regarding vikravandi by-election.

THE HINDU
12 - MAY 2024

# EC allows political parties to open *thaneerpandals*

The Hindu Bureau
CHENNAI

The Election Commission allowed political parties to set up *thaneerpandals* (free water distribution points) with certain conditions.

Based on a proposal from the political parties for opening *thaneerpandals*, the Election Commission of India, New Delhi, announced its 'no objection' to the proposal from the Model Code of Conduct angle subject to the condition that no political party/candidate gets any political mileage from this process in any way and provisions of the MCC are strictly complied with, Chief Electoral Officer Satyabrata Sahoo said in a statement on Wednesday.

Any political party/candidate wishing to open a *thaneerpandal* may be permitted by the District Election Officers based on their request, subject to their adhering to the direction of the Commission and by observing such other extant instructions of the government from health, hygiene and drinking water points of view.

DECCAN CHRONICLE
2 - MAY 2024

# EC ALTERS PROTOCOLS OF STORAGE AND HANDLING OF EVMs

DC CORRESPONDENT
NEW DELHI, MAY 1

The Election Commission has revised the protocol for handling and storage of symbol loading units (SLU), following the directions of the Supreme Court, which had ordered that the machines should be sealed and secured in a container and stored in a strongroom along with the EVMs for at least 45 days after the declaration of poll results.

An electronic voting machine (EVM) has three components -- the ballot unit, the control unit and the voter verified paper audit trail (VVPAT).

■ P4

# EC alters protocols of storage and handling of EVMs

FROM PG 1

An SLU is used to upload the name and symbol of the candidates contesting in a particular seat on VVPAT or paper trail machines.

The poll panel, in a statement on Wednesday, said all state chief electoral officers have been directed to create the necessary infrastructure and provisions to implement the new protocols for handling and storage of the SLUs.

The commission said: "As mandated by the Supreme Court, the revised protocols are applicable in all cases of completion of the symbol loading process in the VVPATs undertaken on or after May 1, 2024."

Before the apex court order, the SLUs were handed over to local poll officials.

THE TIMES OF INDIA
12 MAY 2024

# EC allows parties to open water sheds on roadsides

TIMES NEWS NETWORK

**Chennai:** The Election Commission of India has granted permission to political parties/candidates to open thanneerpandals (water sheds) in Tamil Nadu, subject to certain conditions. Thanneerpandals are kiosks set up to offer drinking water.

Chief electoral officer Satyabrata Sahoo said the commission informed on Tuesday its 'no objection' to the proposal as per model code of conduct. The nod comes with a caveat that no political party/candidate will get any political mileage from the process in any way and provisions of model code of conduct should be strictly complied with. Any political party/candidate that wishes to open a thanneerpandal will be permitted by the district election officer based on a request, subject to the direction of the commission and observing other existing government instructions from the perspective of health, hygiene, and drinking water.

THE NEW INDIAN EXPRESS
2 MAY 2024

# Seal symbol loading units as per SC order, says EC

MUKESH RANJAN @ New Delhi

THE Election Commission of India (ECI) on Wednesday asked all state chief electoral officers (CEOs) to seal and securely store the symbol loading units (SLUs), to be used in the remaining five phases of the Lok Sabha elections, till 45 days post the declaration of results.

The SLUs are devices used to load candidates' party symbols to the Voter-Verified Paper Audit Trail (VVPAT).

The Supreme Court had in its verdict on electronic voting machines (EVMs) and VVPATs last week, directed the ECI to seal and secure the SLUs for 45 days after the declaration of results. At present, only the EVMs and VVPATs are sealed and stored to allow for examination of the machines if candidates file election petitions.

But from now on, in compliance with the court's order, SLUs will also be examined, if there is an election petition.

As per sources, the new requirement could lead to a shortage of up to 3,000 SLUs for the last two phases.

Sources said to meet the shortfall, the Election Commission has asked the Bharat Electronics and the Electronics Corporation of India to manufacture more SLUs.

THE NEW INDIAN EXPRESS
12 - MAY 2024

PROBE SOUGHT

# 90 of 210 CCTV cameras in Tenkasi strong room conk off after rain

EXPRESS NEWS SERVICE
@ Tenkasi

AS many as 90 out of 210 cameras installed in the strong room of the Tenkasi parliamentary constituency, located in a private college, malfunctioned due to the thunderstorm and the rains that accompanied it on Tuesday evening.

Sources said, the cameras went down at around 3.45 pm. "The electronic voting machines (EVMs) collected from the polling stations in the six assembly sectors in Tenkasi, have been stored in a strong room in a private college at Kodikurichi village, of Kadayanallur taluk.

A counting centre has also been set up at the college. A three-layer security system is in place to monitor the strong room round-the-clock. A total of 210 cameras were installed for the purpose, but on Tuesday, there was a thunderstorm with heavy rain.

As a result, 90 cameras installed around the strong room and across the counting centre suffered malfunction. Around 6.30pm, the cameras installed around the strong room were restored," said sources.

Meanwhile, AIADMK's Tenkasi candidate Dr K Krishnasamy sought a detailed report from the Election Commission of India in connection with the malfunctioning of the CCTV cameras. Krishnasamy also demanded that Chief Electoral Officer Satyabrata Sahoo visit the strong room.

"We cannot believe that 93 cameras were faulty at the same time. Some cameras were replaced only after 8 pm on Tuesday. Many questions arise about what happened in the absence of the CCTV cameras," he said.

In a petition to Returning Officer A K Kamal Kishore, BJP candidate B John Pandian also demanded a detailed report on the incident. In response to the concerns, Kishore said that the strong room and the EVMs were safe with a three-layer security system.



**We can't believe 93 cameras were faulty at once. Some cameras were replaced only after 8 pm on Tuesday. Questions arise about what happened in their absence**

Dr K Krishnasamy

DT Next
12 - MAY 2024

# Notification for Vikravandi bypoll likely on May 7

**CHENNAI: The notification for the Vikravandi by-election is likely to be announced by May 7 along with the last phase (7th phase) of Lok Sabha elections notification, sources said.**

According to the sources, the Election Commission (EC) is all set to conduct the by-poll for Vikravandi Assembly constituency in Tamil Nadu, following the demise of DMK MLA N Pugazhenthi on April 6.

"Considering the by-poll expenditure, security measures, the Election Commission has decided to reduce the expenditure by conducting the by-poll on June 1 along with the seventh phase of Lok Sabha polls. Concerned District Election Officer and the Tamil Nadu Chief Electoral Officer were ready to conduct the by-poll anytime. When the notification for the seventh phase LS polls will be out, the notification for Vikravandi Assembly constituency would also come," said TN election officials.

As the Model Code of Conduct is still in force in Tamil Nadu, we can easily conduct the Vikravandi by-poll anytime soon. The Commission is of the opinion that if the by-polls are held for the Vikravandi Assembly constituency, as well, the overall expenditure can be reduced," the EC sources said.

DMK MLA from Vikravandi Assembly constituency in Villupuram district N Pugazhenthi died following a brief illness on April 6.

Hailing from Athiyur Thiruvadi near Sankarapuram, Pugazhenthi started his political career in 1973 and served in various positions in the DMK's Villupuram district unit. He unsuccessfully contested the 2019 by-election to the Vikravandi Assembly constituency and lost to AIADMK's Mutamizhselvan by a margin of 44,924 votes. In the 2021 Assembly elections however, Pugazhenthi wrested the seat from the AIADMK.

இந்து தமிழ் திசை

12 MAY 2024

## நடத்தை விதிகளை பின்பற்றி

# தண்ணீர் பந்தல் திறக்க தேர்தல் ஆணையம் அனுமதி

● சென்னை

தலைமை தேர்தல் அதிகாரி சத்ய பிரத சாஹு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மக்களுக்கு இலவசமாக தண்ணீர் விநியோகிக்கும் வகையில் தண்ணீர்பந்தல் திறப்பது தொடர்பாக அரசியல் கட்சிகள் முன்மொழிவுகள் அனுப்பின. அதன் அடிப்படையில், இந்திய தேர்தல் ஆணையம், தேர்தல் நடத்தை விதிகளின் அடிப்படையில் இந்த முன்மொழிவுகளுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்துள்ளது.

எனவே, எந்த ஓர் அரசியல் கட்சியும், வேட்பாளரும் இந்த செயல்பாட்டின் மூலமாக எவ்விதத்திலும் அரசியல் ரீதியாக பயன் பெறக்கூடாது எனவும், தண்ணீர் பந்தல் திறப்பின்போது தேர்தல் நடத்தை விதிகள் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

எனவே, வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு, சுகாதாரம், தூய்மையான குடிநீர் தொடர்பான அரசாங்கத்தின் பிற அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிக்க வேண்டும். மேலும், அரசியல் கட்சிகள், வேட்பாளர்களின் கோரிக்கையின் அடிப்படையிலும் தேர்தல் நடத்தை விதிகளைப் பின்பற்றியும் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் அனுமதிக்கலாம்.

அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளும் அவரவருடைய எல்லைக்குள் தேர்தல் நடத்தை விதிகளைபின்பற்றி சரியான முறையில் தண்ணீர்பந்தல் செயல்பாடுகள் நடைபெறுகின்றனவா என்பதை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

CEO, TN informs that the political parties can open the free water tent along by maintaining MCC rules.

இந்து தமிழ் திசை

2 - MAY 2024

தென்காசி வாக்கு எண்ணிக்கை மையத்தில்

# 93 கண்காணிப்பு கேமராக்கள் செயலிழப்பு

● தென்காசி

தென்காசி மக்களவைத் தொகுதி வாக்கு எண்ணிக்கை மையத்தில் 93 கண்காணிப்பு கேமராக்கள் செயலிழந்தன.

தென்காசி (தனி) மக்களவை தொகுதியில் பதிவான வாக்குகள் அடங்கிய மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், வாக்கு எண்ணிக்கை மையமான கொடிக்குறிச்சி யுஎஸ்பி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வைக்கப்பட்டுள்ளன. இங்கு 3 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், 93 கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடியுடன் கூடிய கனமழை பெய்தது. அப்போது, வாக்கு எண்ணிக்கை மையத்தில் பொருத்தப்பட்டுள்ள 93 கண்காணிப்புக் கேமராக்களும் செயலிழந்தன. உடனடியாக தொழில்நுட்ப வல்லுநர்கள் வரவழைக்கப்பட்டு, சுமார் 3 மணிநேரத்துக்குப் பிறகு கேமராக்கள் மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டன.

இது தொடர்பாக தென்காசி தொகுதி அதிமுக வேட்பாளரும், புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், தென்காசி மக்களவைத் தொகுதியில் உள்ள 6 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான வாக்குப் பதிவு இயந்திரங்கள் வெவ்வேறு கட்டிடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு இருக்கும்போது 93 கேமராக்களும் ஒரே நேரத்தில் இடி-மின்னல் தாக்கி பழுதடைந்து விட்டதாகக் கூறுவது நம்பும்படியாக இல்லை. மாலை 3 மணிக்கு கேமராக்கள் பழுதானதாகக் கூறப்படுகிறது. இரவு 8 மணிக்குதான் வேறு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ஏற்கெனவே நீலகிரி, ஈரோடு தொகுதிகளில் இதுபோல சிசிடிவி கேமராக்கள் பழுதடைந்ததாக வந்த செய்திகளைப் பார்க்கும்போது, ஏதோ பெரிய முறைகேடு நடக்குமோ என்று சந்தேகம் எழுகிறது என்று தெரிவித்துள்ளார்.

தென்காசி தொகுதி பாஜக வேட்பாளரும், தமிழக மக்கள் முன்னேற்றக் கழக தலைவருமான ஜான் பாண்டியன், தென்காசி மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், "கண்காணிப்பு கேமராக்கள் பழுதானது குறித்த முழு அறிக்கையை, மாவட்ட ஆட்சியர் எழுத்துப்பூர்வமாக வழங்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

93 cctv Camera were got repair at Tenkasi district Strong room.

தினத்தந்தி

12 - MAY 2024

தேர்தல் நடத்தை விதிகளை பின்பற்றி

# அரசியல் கட்சிகளின் தண்ணீர் பந்தல் திறப்புக்கு அனுமதி

## தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு அறிவிப்பு

சென்னை, மே.2-

கோடை காலத்தையொட்டி அரசியல் கட்சிகள் சார்பில் திறக்கப்படும் தண்ணீர் பந்தல்களுக்கு, தேர்தல் நடத்தை விதிகளை பின்பற்றி மாவட்ட தேர்தல் அதிகாரிகள் அனுமதி வழங்கலாம் என்று தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு அறிவுறுத்தி உள்ளார்.

### தண்ணீர் பந்தல்

தமிழகம் முழுவதும் கோடை வெயில் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கோடை வெயிலில் இருந்து மக்களை காக்கும் வகையில், அரசியல் கட்சிகள், தன்னார்வ அமைப்புகள் சார்பில் ஆங்காங்கே வழக்கமாக தண்ணீர் பந்தல்கள் அமைக்கப்படும்.

தற்போது, தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருப்பதால், அரசியல் கட்சிகள் தண்ணீர் பந்தல் அமைப்பதற்கு தேர்தல் ஆணையத்திடம் அனுமதி பெற வேண்டும். இந்த நிலையில், தண்ணீர் பந்தல் அமைப்பதற்கான அரசியல் கட்சிகளின் கோரிக்கைகளுக்கு, தேர்தல் விதிகளை பின்பற்றி மாவட்ட தேர்தல் அதிகாரிகள் அனுமதி வழங்கலாம் என்று தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு அறிவுறுத்தி உள்ளார்.



சத்யபிரத சாகு

இது குறித்து, தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

### விதிகளை பின்பற்ற வேண்டும்

தண்ணீர் பந்தல் திறப்பதற்கான அரசியல் கட்சிகளின் முன்மொழிவுகளுக்கு, இந்திய தேர்தல் ஆணையம் எந்த ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்துள்ளது. எந்த ஓர் அரசியல் கட்சியும், வேட்பாளரும், இந்த செயல்பாட்டின் மூலமாக எந்தவிதத்திலும் அரசியல் ரீதியாக பயன் பெறக்கூடாது எனவும், தண்ணீர் பந்தல் திறப்பின்போது தேர்தல் நடத்தை விதிகள் கண்டிப்பாக கடைபிடிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

எனவே, தண்ணீர் பந்தல் திறக்க விரும்பும் எந்தவொரு அரசியல் கட்சியும், வேட்பாளரும் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு, சுகாதாரம், தூய்மையான குடிநீர் தொடர்பான அரசாங்கத்தின் பிற அறிவுறுத்தல்களை கடைபிடிக்க வேண்டும். அரசியல் கட்சிகளின் கோரிக்கையின் அடிப்படையில் தேர்தல் நடத்தை விதிகளை பின்பற்றி, மாவட்ட தேர்தல் அதிகாரிகள் அனுமதி வழங்கலாம். அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளும், அவரவருடைய எல்லைக்குள் தேர்தல் நடத்தை விதிகளை பின்பற்றி சரியான முறையில் தண்ணீர் பந்தல் செயல்பாடுகள் நடைபெறுகின்றன என்பதை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

CEO, TN informs that the political parties can open the free water tent along by maintaining MCC rules.

தினத்தந்தி
12 - MAY 2024

சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு எதிரொலி:

# மாநில தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் கமிஷன் புதிய உத்தரவு

புதுடெல்லி, மே.2-
விவிபாட் தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டு வெளியிட்ட உத்தரவை தொடர்ந்து, மாநில தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் கமிஷன் புதிய உத்தரவுகளை வழங்கி இருக்கிறது.

**நீதிபதிகள் உத்தரவு**

மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களுக்கு எதிராக சுப்ரீம்கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகளை விசாரித்த நீதிபதிகள் கடந்த மாதம் 26-ந்தேதி அவற்றை தள்ளுபடி செய்தனர்.

அதேநேரம் வாக்குப்பதிவு எந்திர முறைகேடு தொடர்பாக வேட்பாளர்களின் சந்தேகங்களுக்கு தீர்வு காண 2 உத்தரவுகளை நீதிபதிகள் பிறப்பித்தனர்.

அதன்படி விவிபாட் எந்திரங்களில் சின்னங்கள் மற்றும் வேட்பாளர்களின் பெயரை பொருத்திய பிறகு, அதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களை (எஸ்.எல்.யு.) 45 நாட்கள் 'சீல்' வைத்து பராமரிக்க வேண்டும்.

மேலும் தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு, ஓட்டுப்பதிவு எந்திரத்தில் பொருத்தப்பட்ட 'மைக்ரோசிப்'களை சரிபார்க்க 2 மற்றும் 3-வது இடங்களை பிடிக்கும் வேட்பாளர்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும் ஆகிய 2 உத்தரவுகளை நீதிபதிகள் பிறப்பித்தனர்.

**45 நாட்கள் பாதுகாக்க வேண்டும்**

நீதிபதிகளின் இந்த உத்தரவு அடிப்படையில் புதிய நெறிமுறைகளை தேர்தல் கமிஷன் உருவாக்கி இருக்கிறது. இது தொடர்பாக அனைத்து மாநில தேர்தல் அதிகாரிகளுக்கு புதிய உத்தரவு வழங்கப்பட்டு இருக்கிறது.

அதில், 'விவிபாட் எந்திரங்களில் சின்னங்களை பொருத்திய பிறகு, அதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களை (எஸ்.எல்.யு.) சீல் வைத்து ஒரு கன்டெய்னரில் பாதுகாப்பாக வைக்க வேண்டும். இவற்றை மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களுடன் ஒரு ஸ்ட்ராங் ரூமில் வைத்து தேர்தல் முடிவு வெளியான பிறகும் குறைந்தபட்சம் 45 நாட்கள் பாதுகாக்க வேண்டும்' என குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

இதற்காக எஸ்.எல்.யு.க்களை கையாளுதல் மற்றும் சேமிப்பதற்கான உள்கட்டமைப்பு வசதி மற்றும் வழிமுறைகளை உருவாக்குமாறு கேட்டுக்கொண்டுள்ள தேர்தல் கமிஷன், சுப்ரீம்கோர்ட்டு உத்தரவுப்படி, 2024 மே 1-ந்தேதி அல்லது அதற்குப்பிறகு மேற்கொள்ளப்படும் விவிபாட்களில் சின்னம் ஏற்றும் அனைத்து நிகழ்வுகளுக்கும் இந்த நெறிமுறைகள் பொருந்தும் என்றும் கூறியுள்ளது.

**என்ஜினீயர்களிடம் ஒப்படைப்பு**

சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுக்கு முன்பு வரை மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் மற்றும் விவிபாட் சீட்டுகள் மட்டுமே தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு 45 நாட்கள் வரை பாதுகாக்கப்படும். இந்த நாட்களில் எந்த வேட்பாளராவது தேர்தல் முடிவை எதிர்த்து வழக்கு தொடர்ந்தால் இந்த எந்திரங்கள் கோர்ட்டுக்கு கொண்டு வரப்படும்.

அதேநேரம் தேர்தல் முடிந்த மறுநாளே எஸ்.எல்.யு.க்கள், விவிபாட் எந்திரங்கள், கட்டுப்பாட்டு அலகுகள் அனைத்தும் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் தயாரிக்கப்படும் பொதுத்துறை நிறுவனங்களின் என்ஜினீயர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

Impact after the Supreme Court directions, ECI given a new instructions to all CEOs

தினத்தந்தி
2 - MAY 2024

# வாக்காளர் பெயர் நீக்கம் தொடர்பான புகார்கள் மீது ஆய்வு

## தேர்தல் கமிஷன் தகவல்

சென்னை, மே.2-

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில்இருந்து பெயர் நீக்கப்பட்டதாக அளிக்கப்படும் புகார்கள் மீது தேர்தல் முடிந்த பிறகு வாக்காளர் பதிவு அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

### பெயர் நீக்கம்

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு கடந்த எப்ரல் 19-ந்தேதி நடைபெற்றது. வாக்குப்பதிவின் போது பல்வேறு பகுதிகளில் வாக்காளர்களின் பெயர் அந்தந்த வாக்குச்சாவடியில் இல்லை என்ற புகார் எழுந்தது. சில அரசியல் கட்சிகள் சார்பிலும் அதுபற்றிய புகார்கள் கூறப்பட்டன. இதுகுறித்து தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் கேட்டபோது அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

வாக்காளர் பட்டியலுக்கு வாக்காளர் பதிவு அலுவலர்தான் (இ.ஆர்.ஓ.) பொறுப்பாளராக உள்ளார். வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளின் போது, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை குறிப்பிட்ட கால இடைவெளியில் அழைத்து, சேர்க்கப்பட்ட பெயர்கள், நீக்கப்பட்ட பெயர்கள், முகவரி மாற்றம் இவை தொடர்பான விவரங்களை இ.ஆர்.ஓ. அளிப்பார். அந்த விவரங்கள் அனைத்தும் அரசியல் கட்சிகளின் அந்தந்த பகுதி முகவர்களுக்கு தெரியும்.

அதோடு எப்போது வேண்டுமானாலும் தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இருக்கிறதா? என்பதை வாக்காளரால் பார்க்க முடியும். பெயர் சேர்ப்பது, நீக்குவது உள்ளிட்ட கோரிக்கைகளுக்கான விண்ணப்பங்களையும் அளிக்க முடியும். மேலும், தேர்தல் நேரத்தில் கிடைக்கும் அவகாசத்திலும் பட்டியலில் உள்ள விவரங்களை சரிபார்த்துக் கொள்ளலாம். அந்த வகையில், பெயரை சரிபார்த்துக்கொள்ள பல வாய்ப்புகள் தரப்பட்டு உள்ளன.

### புகார்கள் வந்தால்...

தற்போது தேர்தல் முடிந்துவிட்டது. இதற்கிடையே வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கப்பட்டுள்ளது தொடர்பான புகார்களை மாவட்ட தேர்தல் அதிகாரிகளிடம் அல்லது தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் அளிக்கப்பட்டால், வாக்காளர் பதிவு அலுவலருக்கு அந்த புகார்கள் அனுப்பப்படும். அவற்றை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஆய்வு செய்வார்கள்.

பெயர்சேர்க்க ஆன்லைனில் விண்ணப்பித்து இருந்தாலும், முகாம்களில் விண்ணப்பம் வழங்கப்பட்டு இருந்தாலும், அவை யாரால் பரிசீலிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டது? என்பது போன்ற விவரங்கள் அதில் இருக்கும். பெயர் நீக்கப்பட்டிருந்தால், நீக்கத்துக்கு பரிந்துரைத்தவர் விவரமும் அதில் காணப்படும். எனவே, அதை வைத்து பரிசீலித்து, என்ன நிகழ்ந்துள்ளது? என்பதை அறிந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

வாக்காளர் பட்டியலுடன் ஆதார் இணைப்பு, செல்போன் எண் இணைப்பு தொடர்பாக கோர்ட்டுகள் பல அறிவுறுத்தல்களை வழங்கி உள்ளன. தற்போது ஆதார், செல்போன் எண் ஆகிய விவரங்கள், வாக்காளர்களிடம் இருந்து பெறப்பட்டாலும் அவற்றை இன்னும் இணைக்கவில்லை. அவை இணைக்கப்பட்டால், பெரும்பாலான பிரச்சினைகள் தீர்ந்துவிடும். வாக்காளர் பட்டியலில் இருந்து இரட்டை பதிவுகளை சுத்தமாக நீக்க முடியும். ஒருவர் பெயர் பட்டியலில் இருந்து நீக்கப்படும்போது செல்போனில் தகவல் தெரிவிக்கவும் அது ஏதுவாக இருக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

ECI informs that the action will be taken regarding the Electoral roll issue after the counting ends.

தினமலர்

2 MAY 2024

# தண்ணீர் பந்தல் திறக்க கட்சிகளுக்கு அனுமதி

சென்னை, மே 2–

'அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், தேர்தல் நடத்தை விதிகளை பின்பற்றி, தண்ணீர் பந்தல் திறக்க, மாவட்ட தேர்தல் அதிகாரிகள் அனுமதி அளிக்கலாம்' என, தமிழகத் தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹு தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

இலவசமாக தண்ணீர் வினியோகம் செய்வதற்காக, அரசியல் கட்சிகள் தண்ணீர் பந்தல் திறக்க, அனுமதி கோரி உள்ளன.

தேர்தல் கமிஷன் நேற்று முன்தினம் அனுப்பிய கடிதத்தில், தேர்தல் நடத்தை விதிகளின் அடிப்படையில், தண்ணீர் பந்தல் திறக்க எந்த ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்துள்ளது.



சத்யபிரதா சாஹு

எந்த ஒரு அரசியல் கட்சியும், வேட்பாளரும், தண்ணீர் பந்தல் திறப்பதன் வழியே, எந்த விதத்திலும் அரசியல் ரீதியாக பயன்பெறக் கூடாது.

தண்ணீர் பந்தல் திறப்பின்போது, தேர்தல் நடத்தை விதிகள் கண்டிப்பாக கடைபிடிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

எனவே, தண்ணீர் பந்தல் திறக்க விரும்பும் கட்சியும், வேட்பாளரும், தேர்தல் கமிஷன் வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு, சுகாதாரம், தூய்மையான குடிநீர் தொடர்பாக, அரசின் பிற அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்க வேண்டும்.

அவர்களின் கோரிக்கை அடிப்படையில், தேர்தல் நடத்தை விதிகளைப் பின்பற்றி, மாவட்ட தேர்தல் அதிகாரிகள் அனுமதி அளிக்கலாம். அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளும், அவரவருடைய எல்லைக்குள், சரியான முறையில், தண்ணீர் பந்தல் செயல்பாடுகள் நடக்கின்றன என்பதை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

CEO, TN informs that the political parties to open the free water tent along by maintaining mcc rules.

தினமலர்

2 MAY 2024

# ஓட்டு எண்ணிக்கை மையங்களில் கண்காணிப்பு கேமராக்கள் 'மக்கர்'

## தமிழக அரசே பொறுப்பு என்கிறது அ.தி.மு.க.,

மதுரை, மே 2–

தமிழகத்தில் தேர்தல் முடிந்த நிலையில் மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்களை பாதுகாக்கும் மையங்களில், கண்காணிப்பு கேமராக்கள் பழுதாகி வருவதற்கு தமிழக அரசே பொறுப்பேற்க வேண்டும் என அ.தி.மு.க., வலியுறுத்தியுள்ளது.

தமிழகத்திற்கு ஏப்.,19ல் லோக்சபா தேர்தல் நடந்தது. ஓட்டு எண்ணிக்கை ஜூன் 4ல் நடக்கிறது. இன்னும் ஒருமாதம் உள்ள நிலையில், ஓட்டுப்பதிவு இயந்திரங்களை பாதுகாக்கும் மையங்களில் துணை ராணுவம் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளது. கண்காணிப்பு கேமராக்களை கொண்டு 24 மணி நேரமும் கண்காணிக்கப்படுகிறது.

இந்நிலையில் நீலகிரி, ஈரோடு, தென்காசியில் அடுத்தடுத்து கண்காணிப்பு கேமராக்கள் பழுதாகின. உடனடியாக சரிசெய்யப்பட்டாலும் நம்பகத்தன்மை குறித்து கேள்வி எழுந்துள்ளது. இதற்கு தமிழக அரசே பொறுப்பு என மதுரை அ.தி.மு.க., வேட்பாளர் டாக்டர் சரவணன் கூறினார்.

அவர் கூறியதாவது:

ஓட்டு எண்ணிக்கை மையங்களில் ஏற்படும் குளறுபடிகளுக்கு தமிழக அரசே பொறுப்பு ஏற்க வேண்டும். ஏனெனில் மையங்கள் அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. துணை ராணுவம், பாதுகாப்பு பணியை மட்டுமே மேற்கொள்கிறது.

கண்காணிப்பு கேமராக்கள் உள்ளிட்டவற்றை கண்காணிப்பது தமிழக அரசின் அதிகாரிகள் தான். எனவே 'ஷார்ட் சர்கியூட், மின் பிரச்னை' எனக் கூறி கேமரா பழுதை நியாயப்படுத்த முடியாது.

சில இடங்களில் வேண்டுமென்றே மின் தடை ஏற்படுத்துவதாக புகார் எழுந்துள்ளது. 'பவர் கட்' செய்ததால் ஆட்சியை தி.மு.க., இழந்தது என்பதை யாரும் மறந்திருக்க மாட்டர்.

எனவே ஓட்டு எண்ணிக்கை மையங்களில் மின்தடை ஏற்படாத வகையில், நடவடிக்கை எடுக்க வேண்டும். சில மையங்களில் கட்சி ஏஜன்டுகளுக்குரிய அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

News regarding cctv camera were got repair in Tamil Nadu's Strong room.

தினமலர்

2 MAY 2024

# செயலிழந்த 93 கேமராக்கள் தென்காசியில் அடுத்த அதிர்ச்சி

## சந்தேகம் ஏற்படுகிறது



தென்காசி தொகுதி ஓட்டு எண்ணிக்கை மையத்தில், மழை காரணமாக 93 கண்காணிப்பு கேமராக்கள் பழுதடைந்துள்ளன. 5 மணி நேரம் கழித்துதான் பழுதடைந்த கேமராக்கள் சரி செய்யப்பட்டுள்ளன. இடைப்பட்ட நேரத்தில் என்ன நடந்தது என்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

**கிருஷ்ணசாமி,**
தலைவர், புதிய தமிழகம்

**தென்காசி, மே 2–**

தென்காசி ஓட்டு எண்ணிக்கை மையத்தில் நேற்று முன்தினம் 93 கண்காணிப்பு கேமராக்கள் பழுதடைந்தன. தொடர்ந்து கலெக்டர் தலைமையில் கேமராக்கள் மாற்றியமைக்கப்பட்டன.

தென்காசி பார்லி., தொகுதியில் தென்காசி, கடையநல்லூர், சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர், ஸ்ரீவில்லிபுத்துார், ராஜபாளையம் ஆகிய சட்டசபை தொகுதிகள் அமைந்துள்ளன.

தென்காசி தொகுதி தேர்தலுக்கான ஓட்டுப்பதிவு, கடந்த மாதம் 19ம் தேதி நடந்தது.

இந்த ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் தென்காசி யு.எஸ்.பி., கல்லுாரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இயந்திரங்களுக்கு மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மையத்தில் 209 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. 24 மணி நேரமும், மையத்தில் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அரசியல் கட்சி ஏஜன்ட்கள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

இந்நிலையில், தென்காசியில் நேற்று முன்தினம் மாலையில் திடீரென இடி, மின்னலுடன் மழை பெய்தது. இடி மற்றும் மின்னல் தாக்கியதில் தென்காசி யு.எஸ்.பி., கல்லுாரி ஓட்டு எண்ணிக்கை மையத்தில் பொருத்தப்பட்டிருந்த கேமராக்கள் செயலிழந்தன. இதனால், அரசியல் கட்சியினர் அதிர்ச்சி அடைந்தனர்.

புகார் அளிக்கப்பட்டதும், தென்காசி மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர், ஓட்டு எண்ணிக்கை மையத்துக்கு வந்தார். செயலிழந்த கண்காணிப்பு கேமராக்களை அவர் ஆய்வு செய்தார். இடி, மின்னல் காரணமாக கேமராக்கள் செயலிழந்தது தெரிய வந்தது. பின், அவை சீரமைக்கப்பட்டன.

நீலகிரி, ஈரோட்டில் கடும் வெயில் காரணமாக ஓட்டு எண்ணிக்கை மையங்களில் கண்காணிப்பு கேமராக்கள் செயலிழந்தது. தற்போது தென்காசி ஓட்டு எண்ணிக்கை மையத்தில் 93 கண்காணிப்பு கேமராக்கள் இடி, மின்னல் தாக்கியதில் சேதமடைந்திருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கண்காணிப்பு கேமராக்கள் தொடர்ந்து செயலிழந்து வரும் சம்பவங்களால் அரசியல் கட்சியினர் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

## 'உடனே சீரமைக்கப்பட்டன'

கலெக்டர் கமல் கிஷோர் கூறுகையில், ''இடி, மின்னல் காரணமாக, தென்காசி ஓட்டு எண்ணிக்கை மையத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராக்கள் செயலிழந்தன. உடனே தொழில்நுட்ப வல்லுனர்கள் வரவழைக்கப்பட்டு, கேமராக்கள் சீரமைக்கப்பட்டன. மொத்தமாக 93 கேமராக்கள் பழுதடைந்தன. இவற்றை மாற்றியமைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது'' என்றார்.

News regarding cctv camera got repair

தினகரன்

2 MAY 2024



அரசியல் கட்சிகள் தண்ணீர் பந்தல் திறக்கலாம். ஆனால் அங்கு எந்தவொரு அரசியல் நடவடிக்கையும் இருக்கக் கூடாது.

- தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு

News regarding CEO, TN informs to open free water tent by political parties along with MCC rules.

தினகரன்

2 MAY 2024

வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்குப்பதிவு ஒப்புகை சீட்டு இயந்திரத்தில்

# சின்னங்களை சேமிப்பது குறித்த புதிய வழிகாட்டு நெறிமுறைகள்: தேர்தல் ஆணையம் வெளியீடு

புதுடெல்லி, மே 2: தேர்தலில் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்திற்கு வந்துள்ள வேட்பாளர்களின் வேண்டுகோளின் பேரில், சின்னம் ஏற்றும் யூனிட்களுக்கு சீல் வைக்கவும், சேமிக்கவும் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிக்கப்பட்ட மைக்ரோ கன்ட்ரோலர்களை சரிபார்க்கவும் உச்ச நீதிமன்றம் கடந்தவாரம் உத்தரவிட்டது. தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் குறைந்தபட்சம் 45 நாட்களுக்கு வாக்கு பதிவு இயந்திரங்களுடன் சின்னம் ஏற்றும் இயந்திரங்களை கன்டெய்னரில் சீல் வைத்து பாதுகாக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சின்னம் ஏற்றும் யூனிட்டுகளைக் கையாள்வதற்கும் சேமிப்பதற்கும் புதிய நெறிமுறைகளை செயல்படுத்த தேவையான உள்கட்டமைப்பு மற்றும் ஏற்பாடுகளை உருவாக்க அனைத்து மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தின் ஆணைப்படி, மே 1, 2024 அன்று அல்லது அதற்குப் பிறகு மேற்கொள்ளப்படும் வாக்குபதிவு ஒப்புகை சீட்டு கருவிகளில் சின்னம் ஏற்றும் செயல்முறைக்கு இந்த நெறிமுறைகள் பொருந்தும் என்று தெரிவித்துள்ளது.

## நிகோபார் பழங்குடியினர் முதல்முறையாக வாக்களிப்பு

தேர்தல் ஆணையம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆதி பழங்குடியினர் அதிகளவில் தேர்தலில் பங்கெடுப்பது தொடர்பாக தீவிரமான முயற்சிகள் எடுக்கப்பட்டன. கடந்த 2 ஆண்டுகளாக எடுத்து வந்து முயற்சியின் பலனாய் கிரேட் நிகோபார் தீவுகளில் வாழும் சோம்பன் பழங்குடியினர் முதல் முறையாக மக்களவை தேர்தலில் வாக்களித்துள்ளனர். இந்தியாவில் 8.6 சதவீத பழங்குடியினர் உள்ளனர். அவர்களில் 75 பிரிவினர் ஆதி பழங்குடியினர் வகையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

News regarding ECI instructions to all CEOs

தினகரன்
2 MAY 2024

நடத்தை விதிகளை பின்பற்றி

# தண்ணீர் பந்தல் திறக்க கட்சிகளுக்கு அனுமதி

## தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை, மே 2: தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:

அரசியல் கட்சிகள் சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் எழுதப்பட்டு இருந்தது. இந்த கடிதத்துக்கு, டெல்லியில் உள்ள இந்திய தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் பதில் அளித்துள்ளது. அதன்படி, தேர்தல் நடத்தை விதிகளின் அடிப்படையில் முன்மொழியப்பட்ட முன்மொழிவுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்துள்ளது. அதில், எந்த ஒரு அரசியல் கட்சியும், வேட்பாளரும் இந்த செயல்பாட்டின் மூலமாக எந்த விதத்திலும் அரசியல் ரீதியாக பயன்பெறக்கூடாது எனவும், தண்ணீர் பந்தல் திறப்பின்போது தேர்தல் நடத்தை விதிகள் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது. எனவே, தமிழகத்தில் தண்ணீர்பந்தல் திறக்க விரும்பும் எந்தவொரு அரசியல் கட்சியும், வேட்பாளரும், இந்திய தேர்தல் ஆணையத்தின் மேற்கண்ட வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு, சுகாதாரம், தூய்மையான குடிநீர் தொடர்பான அரசாங்கத்தின் பிற அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்க வேண்டும்.

அரசியல் கட்சிகளின் கோரிக்கையின் அடிப்படையில் தேர்தல் நடத்தை விதிகளை பின்பற்றி மாவட்ட தேர்தல் அதிகாரிகள் தண்ணீர் பந்தல் வைக்க அனுமதிக்கலாம். அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளும் அவரவருடைய எல்லைக்குள் தேர்தல் நடத்தை விதிகளை பின்பற்றி சரியான முறையில் தண்ணீர்பந்தல் செயல்பாடுகள் நடைபெறுகின்றன என்பதை உறுதி செய்ய வேண்டும்.

News regarding CEO TN informs that the political Parties to open the free drinking water tent along by maintaining MCC rules

தினமணி

2 - MAY - 2024

# தண்ணீர் பந்தல்களை அரசியல் ரீதியாகப் பயன்படுத்தக் கூடாது

## கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் கட்டுப்பாடு

சென்னை, மே 1: கொளுத்தும் கோடை வெயில் காரணமாக தமிழகத்தில் கட்சிகளால் அமைக்கப்படும் தண்ணீர் பந்தல்களை அரசியல் ரீதியாகப் பயன்படுத்தக் கூடாது என்று தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு அறிவுறுத்தியுள்ளார். மக்களவைத் தேர்தல் காரணமாக, தண்ணீர் பந்தல்களை அமைப்போர் நடத்தை விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.



இதுகுறித்து, அவர் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அரசியல் கட்சிகளின் சார்பில் திறக்கப்படும் தண்ணீர் பந்தல்கள் குறித்து தேர்தல் ஆணையத்திடம் விளக்கம் கோரப்பட்டது. தேர்தல் நடத்தை விதிகளின் அடிப்படையில் தண்ணீர் பந்தல்களைத் திறக்க எந்த ஆட்சேபனையும் இல்லை என்று ஆணையம் தெரிவித்துள்ளது. அதேசமயம், தண்ணீர் பந்தல்களை வைத்துக் கொண்டு எந்தவொரு கட்சியோ அல்லது வேட்பாளரோ அவற்றின் மூலம் அரசியல் ரீதியாகப் பயன்பெறக் கூடாது. தண்ணீர் பந்தல்கள் திறப்பின் போது, தேர்தல் நடத்தை விதிகளை கண்டிப்பான முறையில் கடைப்பிடிக்க வேண்டும்.

**விதிகளை பின்பற்ற வேண்டும்:** தண்ணீர் பந்தல்களைத் திறக்க விரும்பும் எந்தவொரு அரசியல் கட்சியும், வேட்பாளரும் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு செயல்பட வேண்டும். அத்துடன், தண்ணீர் பந்தல்களை சுகாதாரமாக அமைப்பதுடன், அவற்றில் தூய்மையான குடிநீரை வைத்திருக்க வேண்டும். இதுதொடர்பாக அரசு வெளியிட்டுள்ள அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்க வேண்டும்.

தண்ணீர் பந்தல்களைத் திறக்கக் கோரி அரசியல் கட்சிகளோ அல்லது வேட்பாளர்களோ அனுமதி கோரினால், தேர்தல் நடத்தை விதிகளைப் பின்பற்றி உரிய முறையில் அவற்றுக்கு மாவட்டத் தேர்தல் அதிகாரிகளே அனுமதி அளிக்கலாம்.

மேலும், அனைத்து மாவட்டத் தேர்தல் அதிகாரிகளும் அவரவர் எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் பந்தல்கள் தேர்தல் நடத்தை விதிகளைப் பின்பற்றி செயல்படுகின்றனவா என்பதை உறுதி செய்ய வேண்டும் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்துள்ளார்.

CEO, TN informs that the political parties to open the free water tent along by maintaining MCC rules.